

# பச்சிலை

## இதழ் - 2

## தேசிய வாசிப்பு மாத சிறப்புமலர் - 2016





"பச்சிலை மலர்க்குழு"
புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை

# பச்சிலை

## இதழ் - 2

## தேசிய வாசிப்பு மாத
## சிறப்பு மலர் - 2016

*வெளியீடு:*

*"பச்சிலை மலர்க்குழு"*

புலோப்பளை பொது நூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பச்சிலை |
| இதழ் | - | *2* |
| பக்கங்கள் | - | *100* |
| அச்சுப்பதிப்பு | - | மட்டுவில் ரம்யன் அச்சகம் |
| மலர் ஆசிரியர் | - | திரு. அ.சசிகுமார் |
| வெளியீடு | - | "பச்சிலை மலர்க்குழு"<br>பச்சிலைப்பள்ளி பிரதேச சபை<br>புலோப்பளை பொதுநூலகம்<br>பளை |
| தொலைபேசி இல | - | *0243243544* |
| மின்னஞ்சல் | - | pallaips@gmail.com |
| விலை | - | *250.00* |

# உள்ளே....


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் | iii-x |
| 2) | மலராசிரியரின் உள்ளத்திலிருந்து | xi |
| 3) | பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வழித்தடத்தில் நாம் பெற்றதும் பெறவேண்டியதும் | 1 |
| 4) | பொது வழிகள் மீதான பிரதேச சபையின் அதிகாரங்களும் கடமைகளும் | 8 |
| 5) | பிரதேச சபையின் சேவை வழங்கல்... | 14 |
| 6) | பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் இயற்கை வளங்கள் | 16 |
| 7) | உன் முகவரியைத் தேடி... | 21 |
| 8) | கிராம அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களுக்குள்ள பங்கு | 22 |
| 9) | இளையோரே கேளீர் | 33 |
| 10) | சமுதாய வளர்ச்சியில் பொது நூலகங்களின் பங்கும் அவற்றினால் வழங்கப்படக்கூடிய சேவைகளும் | 34 |
| 11) | யாருக்கு முதல் மரியாதை? | 42 |
| 12) | பூவுலகம் போற்றும் பேறுகள் தருவாள் | 43 |
| 13) | வாசிப்பை நேசிப்போம் | 44 |
| 14) | அலைகள் | 57 |
| 15) | சிறுகதை - அழியாத சீதனம் | 58 |
| 16) | புற்றுநோயிற்கான காரணங்களும், நோய் வராமல் தடுக்கும் முறைகளும் | 62 |
| 17) | பச்சிலைப்பள்ளியிருக்கும் பரந்தாமா | 71 |
| 18) | கற்க வேண்டிய வயதில் கற்றுக்கொள் | 72 |
| 19) | ஈர நினைவுகள் | 73 |
| 20) | பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அண்மைக்கால அபிவிருத்திப் பணிகள் - ஓர் நோக்கு | 74 |

# பச்சிலை மலர்க்குழு

தலைவர் - ***திரு. அ. கேதீஸ்வரன்***
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

செயலாளர் - ***செல்வி. செ. உமாதேவி***
(நூலகர்- புலோப்பளை பொதுநூலகம்)

பொருளாளர் - ***திருமதி அ. தர்மகுலசிங்கம்***
(இளைப்பாறிய நூலகர்)

மலராசிரியர் - ***திரு. அ. சசிகுமார்***
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## செயற்குழு உறுப்பினர்கள்

***திருமதி. செ. அனுஷியா*** (செயலாளர், பச்சிலைப்பள்ளி பி.சபை)

***திரு. சி. புவனராசா*** (நிர்வாக கிராம அலுவலர் - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்)

***திரு ச. முரளீதரன்*** (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)

***திரு. சி. கருணாகரன்*** (ஆக்க இலக்கியப் படைப்பாளி)

***திரு. சு. சுரேன்*** (தலைவர் - வாசகர் வட்டம்)

***திருமதி இ. சிறிஸ்கந்தராஜா*** (ஆசிரியர்)

***திரு. சி. கனகசிங்கம்*** (தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம், முருகந்த நகர்)

***திரு. பி. அலேஸ்*** (சென்பீற்றர் சனசமூக நிலையம்)

## நூலக ஆலோசனைக்குழு

தலைவர் - ***திருமதி. செ. அனுஷியா*** (செயலாளர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை)

உபதலைவர் - ***திருமதி. கோ. இராஜபாஸ்கரன்*** (பிரதம முகாமைத்துவ உதவியாளர்)

செயலாளர் - ***செல்வி செ. உமாதேவி*** (நூலகர்- பொது நூலகம் புலோப்பளை)

ஆலோசகர் - ***திரு அ. சசிகுமார்*** (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்) பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி.

## உறுப்பினர்கள்

***திரு. வ. ஜீவரத்தினம்*** (அதிபர், கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை)

***திரு. ச. கௌரீசன்*** (ஆசிரியர், கிளி பளை றோ.க.த.க.பாடசாலை)

***திரு. சி. கனகசிங்கம்*** (தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம், முருகந்தநகர்.

***திரு. சி. புவனராசா*** (கிராம அலுவலர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி)

***திரு. இ. கருணாகரன்*** (தலைவர், ஔவையார் சனசமூக நிலையம், கச்சார்வெளி)

***திருமதி. பி. பிறேமலதா*** (ஆசிரியர், புனித அந்திரேயா முன்பள்ளி, பளை)

***திருமதி. ஞா. கலாஜினி*** (தலைவர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், முகமாலை)

***திரு. பொ. கந்தசாமி*** (தலைவர், தம்பகாமம் சனசமூக நிலையம்)

***திரு. இ. அமலதாஸ்*** (தலைவர், புலோப்பளை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்)

# பச்சிலை மலர்க்குழு



இருப்பவர்கள் இடமிருந்து வலம்:
திரு. அ. சசிகுமார் (ச. அ. உ) திருமதி செ. அனுஷியா (செயலாளர் ப.பி.ச) திரு. அ. கேதீஸ்வரன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர்)
திரு. சி. புவனராசா (கிராம அலுவலர்)
நிற்பவர்கள் இடமிருந்து வலம்:
திரு. சி.கனகசிங்கம் (தலைவர் கி.அபி.ச.) திரு. ச. முரளீதரன் (நி. உ.) திருமதி. அ. தர்மகுலசிங்கம் (இளைப்பாறிய நூலகர்)
செல்வி. செ. உமாதேவி (நூலகர்) திருமதி இ. சிறீஸ்கந்தராஜா (ஆசிரியர்)




# வாழ்த்துச் செய்தி

## "பச்சிலை" ஒரு சமூகப்பணி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் வெளியீடு செய்யப்பட்டு வரும் பச்சிலை சமூக சஞ்சிகையின் இதழ் இவ்வாண்டுக்குரிய வாசிப்பு மாதத்தின் சிறப்பிதழாக வெளிவருவது கண்டு நான் பெருமகிழ்வடைகிறேன். வாசிப்புப் பழக்கம் மிகக் குறைந்துவரும் இன்றைய நாட்களில் பிள்ளைகளிடம் வாசிப்பை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாக பச்சிலைச் சஞ்சிகை இப்பிரதேசத்தைச் சார்ந்த உள்ளூர் படைப்பாளிகளினது ஆக்கங்களை மையப்படுத்தி வெளிவருவது பாராட்டுக்குரியது. இவ்வெளியீட்டை திறம்பட செய்யும் பச்சிலை மலர்க்குழுவினருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினருக்கும் எனது பாராட்டுக்கள். எமது பிரதேச மணம் பெற்றுவரும் இச்சஞ்சிகைக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்,**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் - மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,
கிளிநொச்சி.



# வாழ்த்துச் செய்தி

## *பச்சிலை என்றும் வளர்ந்து ஓங்குக*


பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள பச்சிலை எனும் தேசிய வாசிப்பு மாத இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வெய்துகிறேன். இப்பிரதேச சபையின் பொதுநூலகத்தால் “பச்சிலை” தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ் 1 வெளியிடப்பட்டபொழுது அதிகமான கட்டுரைகள் வெளிவந்தன. அதற்கடுத்ததாக இதழ் 2 வெளிவருவது சிறப்பானதும் பாராட்டத்தக்கதுமாகும்.

ஒரு பிரதேச சபை என்பது அதன் நிருவாகப்பரப்பில் உள்ளடங்கும் மக்களது கலை, கல்வி,பொருளாதார விழுமியங்களை வளர்ப்பதற்கான செயற்றிட்டங்களை உள்ளடக்கியதாகும். அவ்வகை நோக்கின் இப்பிரதேச நிருவாகத்திற்குட்பட்ட மாணவர்களதும், வாசிப்புப் பழக்கமுடையவர்களதும் அறிவுசால் தேவைகளையும், பொழுதுபோக்கு நோக்குடன் பொழுதை பயனுள்ளதாக ஆக்குவோருக்காகவும் நூல்நிலையம் செயற்படுகிறது. இந்நூல் நிலையத்தின் செயற்பாடுகளில் ஒரு சிறப்பம்சமே வாசிப்பு மாதம். வாசிப்பு என்பது ஒரு மனிதனை பூரண மனிதனாக்குகிறது என்பது ஆன்றோர் வாக்கு. அத்துடன் ஒரு நாட்டில் ஒரு நூல்நிலையம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது என்பதும் ஆன்றோர் வாக்காகும். இத்தகைய பெருமைமிகு நோக்கமுடையது நூல்நிலையமாகும். பாடநூல்களை பணம்கொண்டு வாங்க

முடியாது. மாணவர்கள் சிறந்த பயன்பெற உதவுவது இந்நூல்நிலையம். இவ்வாறே பலரும் பொழுது போக்கிற்காகவும் அறிவு நோக்குடனும் வாசிப்பிற்காக நாடுவதும் இந்நூல்நிலையத்தையே .

ஆகவே பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் வெளிக்கொணர இருக்கும் பச்சிலை தேசிய வாசிப்புமாத இதழ் 2 அதன் நோக்கத்தைப் பூரணப்படுத்தி மக்களது கைகளில் விரைவில் தவழ ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் செயலாளர், நூலகர், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி சஞ்சிகையை விரைவில் காண விழைகின்றேன்.

***ப. அரியரத்தினம்***
வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
பெரிய பளை, பளை.



## உள்ளூராட்சி ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி

இலங்கையின் இதழியல் வரலாற்றில் வர்த்தமானி எனப்படும் "கசற்" முதலாவது சஞ்சிகையாக கருதப்படவேண்டியுள்ளது. இது 1802 ஆம் ஆண்டிலிருந்து மும்மொழிகளிலும் வெளியிடப்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் முக்கிய செய்திகளைத் தாங்கிவந்த வர்த்தமானி தற்போது செய்திகளைத் தாங்கிவராவிட்டாலும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்ப் பத்திரிகை வரலாற்றினை ஆராய்ந்தால் கிறிஸ்தவ சமய பத்திரிகையான உதயதாரகையே முதல் பத்திரிகையாக அமைந்துள்ளது. இதுவே தமிழ் கூறும் நல்லுலகின் முதற் பத்திரிகையாகவும் உள்ளது. இதன் பின் மோனிங் ஸ்ரார் (Morning star–1841), பாதுகாவலன் (Catholi guardian – 1876), முஸ்லிம் நேசன் (Muslim friend – 1882) ஆகியன தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவந்தன. பாதுகாவலன் சஞ்சிகையானது ஒரு நூற்றாண்டினைத் தாண்டி தற்போதும் வந்துகொண்டிருக்கின்றது.

மேற்கூறப்பட்ட சஞ்சிகைகளைத் தொடர்ந்து ஈழகேசரி, சுதந்திரன், ஈழநாடு ஆகியன வாரப் பத்திரிகைகளாக வரத்தொடங்கியுள்ளன. இன்று வடபகுதியில் மூன்றிற்கு மேற்பட்ட பத்திரிகைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. பல நிறுவனங்கள் தங்கள் ஆண்டு மலர்களாக சஞ்சிகைகள் நூல்கள் என்பனவற்றை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் சஞ்சிகைகளை வெளியிடுவது கஷ்டமான பணியல்லவாயினும் நூல்களை வாசிப்பவர்களை ஊக்குவிப்பது மிகவும் கஷ்டமான பணியாகவேயுள்ளது. நூலகர்கள் வாசிப்பு மாதத்தில் மாத்திரம் இப்பணிகளை மேற்கொள்ளாது தொடர்ந்தும் இது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான சஞ்சிகைகள் தாங்கிவரும் ஆக்கங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டவற்றிலிருந்து நகல் எடுக்கப்பட்டவையாக இல்லாமல் தமது பிரதேசத்தின் கலை பண்பாட்டு சூழல்களைப் பிரதிபலிப்பவையாகவும், கிராமப் பிரதேசத்தின் தொன்மை வரலாறுகளைக் காட்டுபவையாகவும், பிரதேச மக்களின் எழுத்துக்கள் சிருஷ்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாகவும் விளங்குவதுடன் பச்சிலை தொடர்ந்தும்..... தொடர்ந்தும்.... வெளிவந்து கொண்டிருக்க வேண்டுமென்று வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு. பொ. குகநாதன்**
*உள்ளூராட்சி ஆணையாளர்*
*வட மாகாணம்*



# பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி

*நூலகம் என்பது தேன்கூடு - அதில்*
*ஒவ்வொரு துளிகளும் தேன்துளிகள்*

நூலகம் என்பது அறிவுச் செல்வத்தின் களஞ்சியம் என்பர், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து வைக்கும் சிந்தனைப் பாலம். இங்கே வகை வகையான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர்கள் எனப் பலவற்றைக் காணலாம். இவை ஒவ்வொன்றுமே காலத்தின் பதிவுகளாக, எம்மவர் வாழ்க்கையின் சாட்சிகளாக அமைவதை யாரும் மறக்க முடியாது.

அந்த வகையில் காலத்தின் பதிவுகளில் ஒன்றாகப் பச்சிலை சஞ்சிகை வெளிவருவது பாராட்டத்தக்கதாகும். வாசிப்பு மாதத்தின் ஒரு செயற்றிட்டமாக இச்சஞ்சிகையாக்கம் வெளிவருவது மேலும் சிறப்பிற்குரியது.

இச்சஞ்சிகை சிறப்புற வெளிவருவதுடன் தொடர்ந்து வரும் காலங்களிலும் வெளிவர எல்லாம் வல்ல இறைவனின் அருளை இறைஞ்சி ஆசி வழங்குவதுடன் இச்செயற்பாட்டிற்காக அயராது உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ந. பிரபாகரன்**
பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
கிளிநொச்சி.



### பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்திருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையானது மக்களுக்கு நற்சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் வெளியிடவிருக்கும் "பச்சிலை" எனும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையானது பிரதேசத்தினதும், சமூகத்தினதும் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு தன்னாலான செயற்றிறன் மிக்க சேவைகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இச் சிறப்பு மலர் வரலாறு, பண்பாடு, மருத்துவம், சமயம், ஆக்கஇலக்கியம், கவிதை போன்ற அம்சங்களைத் தாங்கி வெளிவருவது எமது பிரதேசத்திற்கு பெருமை தரும் விடயமாகும்.

இந்நூலினை அலங்கரித்துள்ள கட்டுரைகள் பதிவுகள் என்பன எமது பிரதேச வரலாற்றை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் ஒரு முயற்சியாக அமைந்துள்ளமை மிகச் சிறப்பான அம்சமாகும். நல்ல நிறைவான நேர்மனப்பாங்குடன் மக்களிற்கு சேவையாற்றி வரும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் உயரிய சேவைகள் தொடர வாழ்த்துவதுடன் " பச்சிலை" எனும் நூல் வரலாற்றுப் பதிவாக தடம் பதிக்க எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப. ஜெயராணி**
*பிரதேச செயலாளர்,*
பச்சிலைப்பள்ளி.



*பிரதேச சபைச் செயலாளரின்*

# வாழ்த்துச் செய்தி

உள்ளூர் சேவை மேம்பாட்டின் மூலம் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்கள் உன்னத சேவையை நுகரத் துடிக்கும் உன்னதமான வேளையில் "பச்சிலை" சஞ்சிகையின் இதழ் - 2 தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக எமது சபையின் கீழ் இயங்கும் புலோப்பளை பொதுநூலகத்தினால் வெளியிடப்படுவதை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது இனத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைத் தாங்கிநிற்கும் இவ் இதழ் பலரது ஆக்கங்களையும் தன்னகத்தே கொண்டு புத்துயிர் பெற்று மிளிர்கின்றது.

காலத்தின் மாற்றத்திற்கேற்ற சேவை வழங்கலுக்கான மதிநுட்பத்தைக் கொண்டமைந்து பலரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டு உவந்து இழுக்கின்ற இம்மலரானது மலர்ந்து மணம்வீசி புகழ் பரப்ப என்றென்றும் என் நல்வாழ்த்துக்கள்.....

***திருமதி. செ.அனுஷியா***
*செயலாளர்.*
*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை*
*பளை.*



# இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து...

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகத்தினூடாக ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறப்பிதழாக "பச்சிலை" எனும் சஞ்சிகையின் இதழ் - 2 இனை வெளியீடு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நூலகசேவையானது முன்னரிலும் பார்க்க கோட்பாட்டு ரீதியாகவும், செயல் ரீதியாகவும் மாற்றமடைந்து வந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு கல்விக் கூடமாகவும், இளைஞர்களுக்குத் தொழில் உலகமாகவும், அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அடிப்படைத் தகவல்களை வழங்கும் பொதுஜன பல்கலைக் கழகமாகவும் நூலகங்கள் விளங்குகின்றன. எனவேதான் பொது நூலகங்களையும், வாசிகசாலைகளையும் உள்ளூராட்சி மன்றங்கள் நடாத்தி மனித வாழ்க்கைக்கு தேவையான அறிவையும் ஆற்றலையும் வளர்த்து வருகின்றன. இவ்வகையில் புலோப்பளை பொதுநூலகமும் தனது பணிகளை மேற்கொள்ளத் தவறவில்லை.

அதன் ஒரு வளர்ச்சிப் படியாக வெளிவருவதே "பச்சிலை" எனும் சஞ்சிகை. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தமது படைப்புக்களை வெளிக்கொணர வாய்ப்புக்களற்று இருக்கும் மாணவர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் இதழ் - 1 கடந்த வருடத்தில் வெளியீடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து அரையாண்டு சஞ்சிகையாக வெளியிட தீர்மானிக்கப் பட்டிருந்தபோதும் பலதடைகளினால் அவ்வாறு வெளியீடு செய்ய முடியவில்லை. எனினும் நூலகரினதும் மலர்க்குழுவினதும் அயராத

முயற்சியினால் 2016 ஒக்டோபர் வாசிப்புமாத சிறப்பிதழாக இதழ் - 2 வெளிவருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இச்சிறப்பிதழை வெளியிடுவதற்கு பலவழிகளிலும் ஊக்கமளித்த பிரதேச சபையின் செயலாளர் திருமதி.செ.அனுஷியா அவர்களுக்கும், மலர்க்குழுவின் தலைவராக இருந்து செயலூக்கம் கொடுத்த கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு.அ.கேதீஸ்வரன் அவர்களுக்கும் அயராது பல தடைகளையும் தாண்டி உழைத்த புலோப்பளை பொது நூலக நூலகர் செல்வி.செ.உமாதேவி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெருந்தகைகளுக்கும், ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கும், பல சிரமங்களுக்கும் மத்தியில் இவ் இதழ் வெளிவர உழைத்த மலர்க்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும், உதவிய பிரதேச சபையின் உத்தியோகத்தர்களுக்கும், நிதி அன்பளிப்புக்களை வழங்கி உதவிய நிறுவனங்கள் மற்றும் அன்புள்ளங்களுக்கும், இவ் இதழினை அழகுற அச்சிட்டுத்தந்த ரம்யன் பதிப்பகத்தாருக்கும் இதழாசிரியர் என்றவகையில் எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

பச்சிலைப்பள்ளிக்கே உரித்தான "பச்சிலை" என்ற இவ் இதழ் எதிர்காலத்தில் பல புதுமைகளுடன் வெளிவர அனைவரதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிறைவு செய்கின்றேன்.

**அ.சசிகுமார்,**

*இதழாசிரியர்*
*(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள்



புலோப்பளை உப அலுவலக உத்தியோகத்தர்கள்



முள்ளிப்பற்று உப அலுவலக உத்தியோகத்தர்கள்



முகமாலை உப அலுவலக உத்தியோகத்தர்கள்



# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வழித்தடத்தில் நாம் பெற்றதும் பெறவேண்டியதும்

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
BA (Hons), M.Phil(ECN), Dip. in Planning
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபை பிரிவுகளில் ஒன்றாக அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபைப் பிரிவானது 167.70 சதுர கிலோமீற்றர் கொண்ட 16770 ஹெக்டயர் நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது. இதில் 18 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 44 கிராமங்களைக் கொண்ட 3774 குடும்பங்களைச் சார்ந்த 12275 உறுப்பினர்களை ஆளுகைக்குள் கொண்டதாக இச்சபை இயங்குகின்றது. இதில் ஆண்கள் 5944 பேரும், பெண்கள் 6331 பேரும் உள்ளடங்குகின்றார்கள். சமுதாய ரீதியாக தமிழர்கள் 3720 பேரும், சிங்களவர் 2 பேரும், முஸ்லீம் 2 பேரும் கொண்ட குடும்பங்கள் காணப்படுகின்றது. இச்சபையானது தனது நிர்வாகச் செயற்பாடுகளின் வசதி கருதி புலோப்பளை, முகமாலை, இயக்கச்சி ஆகிய கிராமங்களில் உப அலுவலகங்களை அமைத்து செயற்பட்டு வருவதுடன் இதனது பிரதான செயலகம் A9 வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுவருகிறது.

பிரதேச சபையினது சேவை வழங்கும் நடவடிக்கை தொடர்பில் அதன் செயல்திறனை மதிப்பிடும்போது 3 நூலகங்களின் சேவையை இது வழங்குவதுடன் மொத்தமாக 8507 நூல்களைக் கொண்ட பாரிய அளவிலான நூலகங்களாகவும்

இது காணப்படுகின்றது. நூல்களின் வாசிப்பு அருகிவரும் இக்காலத்தில் வாசகனை அச்சூடகக் கலையில் இணைத்து வாசிப்புப் பழக்கத்தை நல்ல முறையில் பரப்புவதில் இந் நூலகங்களின் பங்கு காத்திரமானதாகும். அதனை விட 02 ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு ஊடாக இலவசமாக பல்வேறு பாரம்பரிய நோய்களிற்கு சிகிச்சை அளிப்பதுடன் நவீன சூழலில் இயற்கைக்கு மாறாத உணவுப்பழக்கத்தை உருவாக்குவதிலும் பாரம்பரிய சிகிச்சை முறைகளை தொடர்ந்து பேணுவதிலும் இவ் ஆயுர்வேத வைத்திய சாலைகளின் பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கவை.

இதே போல பிரதேச சபையின் செயற்பாடுகளை கிராம மட்டத்தில் அமுலாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட 24 சனசமூக நிலையங்கள் தற்பொழுது செயல்படுவதுடன் இந்த அமைப்புகள் ஊடாக மக்களின் பங்கேற்புடனான கிராமிய நிர்வாகப் பொறிமுறை அமுலாக்கப்பட்டு வருகின்றது. எனினும் இவ் 24 சனசமூக நிலையங்களில் 16 நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டிட வசதி எதுவும் இல்லாது செயல்படுவதுடன் படிப்பகங்களை செயல்படுத்துவதில் 14 சனசமூக நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. அதனை விட நூல்களை இரவல் வழங்கும் பகுதியோ, ஆவணக்காப்பகமோ எந்தவொரு சனசமூக நிலையத்தினாலும் செயல்படுத்தப்படவில்லை என்பது கவலை தருவதாகவே உள்ளது.

அத்துடன் பிரதேச சபையின் மற்றுமொரு பிரதான சமூக வேலைத்திட்டமான சுடுகாடுகள், இடுகாடுகள் பராமரிப்பு செய்வதில் 15 சுடுகாடுகளும், 03 இடுகாடுகளுமாக 18 மயானங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன் இதில் ஒரேயொரு சுடுகாட்டில் மட்டுமே மண்டப வசதி காணப்படுகின்றது. 02 சுடுகாட்டில் மட்டுமே கிணறு வசதி காணப்படுகின்றது. எந்தவொரு மயானத்திலும் சுற்று மதிலோ வேலியோ காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க பலவீனமாக உள்ளது.

பிரதேச சபையின் ஆளுகைக்குள்வரும் மற்றுமொரு பிரதான பொருளாதார வேலைத்திட்டமாக அமைவது கிராமிய சந்தைகளாகும். இவ்வகையில் பளை மத்திய சந்தை, முள்ளிப்பற்று பொதுச் சந்தை, புதுக்காட்டுச் சந்தி பொதுச் சந்தை, மாசார் பொதுச் சந்தை, முகமாலை பொதுச் சந்தை ஆகியன காணப்பட்ட போதும் இவற்றில் எதிலுமே நவீன கட்டிட வசதியமைப்பைக் கொண்ட சந்தைகளாக இவை காணப்படவில்லை. பளை மத்திய சந்தை இந்நகரத்தின் மையச் சந்தையாக இருந்தும்கூட நவீன வடிவமைப்புடன் இச்சந்தை இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. போதியளவு காணி வசதிகள் இருந்தும் நன்கு திட்டமிடப்பட்ட கட்டிட அமைப்போ, உள்ளக வசதிகளோ இதுவரை அமைக்கப்படவில்லை. கடைத்தொகுதிகள் மட்டும் நல்ல முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அது நவீன பஸ்தரிப்புடன் இணைந்து வடிவமைக்கப்பட்டது பாராட்டுக்குரியது.

முகமாலைச் சந்தை இதுவரை மீளமைக்கப்படவில்லை. எனினும் மக்கள் இவ்விடத்தில் கூடி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இங்கு நிரந்தரக் கட்டிடங்களும், கிணறு மலசலகூட வசதிகளும், சுற்றுமதில் உட்பட இதர கடைத்தொகுதிகளையும் உருவாக்கக் கூடிய வாய்ப்பு இருந்து வருகின்றது. புதுக்காட்டு சந்தியில் உருவாக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் வேறு தேவைக்காக மாற்றப்பட்டு நோக்கத்துக்குரிய வெளியீட்டை வழங்காதுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். நகரகழிவகற்றல் தொடர்பில் இச்சபையின் செயல்பாட்டை நோக்குமிடத்து 01 நிரந்தர வாகனமும 10 கழிவகற்றும் தொழிலாளர்களுடன் செயல்படுவதுடன் அறந்திநகர், அல்லிப்பளை பகுதியிலேயே சகல திண்மக்கழிவுகளும் அகற்றப்படுகிறது. திரவக்கழிவுகள் கரைச்சி பிரதேச சபைக்கு எல்லைப் பரப்பில் உள்ள உமையாள்புரத்துக்கே எடுத்துச்

செல்லப்படுகின்றது. இது செலவுகூடிய செயல்பாடாகவே உள்ளது.

பிரதேச சபையின் செயல்பாட்டில் உள்ள மிகப்பிரதான செயல்பாடுகளில் ஒன்றாக வீதிகளின் அபிவிருத்தியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பிரிவில் இதுவரை 15 கிலோமீற்றர் அளவான வீதிகளே தார் இடப்பட்டு திருத்தப்பட்டுள்ளன. கிரவல் வீதிகளாக 146 வீதிகள் காணப்படுகின்றன. இதில் 194.2 கிலோமீற்றர் நீளமான வீதிகளாகும். இதனைவிட மணல் வீதிகளாக மேலும் 50 கிலோமீற்றர் வீதிகளும் காணப்படுகின்றன. இவற்றின் மீது பல மில்லியன் ரூபாய்களின் முதலீடுகளுடனேயே திருத்தப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் 15 அடிக்கு மேலான அகலத்தை கொண்ட உள்ளூர் வீதிகளே பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்படக்கூடியவை என்பதால் பல கை ஒழுங்கைகளையும் வீதி அகலிப்புக்கு உட்படுத்துவதன் மூலமே முறையான பிரதேச சபை ஆளுகைக்கு வரமுடியும் என்பதால் பொதுமக்கள் தமது வீதிகளை 15 அடிக்கு மேலாக அகலிப்பு செய்து கொள்வதும் அதிலும் குறிப்பாக தார் இடக்கூடிய வீதிகளாக அவை தரமுயர்த்தப்படும்போது 32 அடி வீதிகளாக அமைதல் வேண்டும். ஆகக்குறைந்தது 22” அகலம் கொண்ட வீதிகளையே பிரதேச சபையின் அபிவிருத்திக்குரிய வீதிகளாக தெரியப்பட முடியும் என்பதால் இவ்விடயத்தில் கிராம மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கியே ஆக வேண்டும். வீதி அகலிப்பு தொடர்பில் காணிகளை அபிவிருத்தி செய்யும் போதே போதியளவான தகவல்கள் பொதுமக்களுக்கு பிரதேச சபை நிர்வாகத்தால் வழங்கப்படுவதுடன் மதில், வீடு போன்ற நிர்மாணப் பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டிட அனுமதி நடைமுறையை பாராபட்சமின்றி சகல கிராமங்களிலும் அமுலாக்குவதும் அவசியமாகும். கட்டுமானம் தொடர்பில்

எந்தவொரு நடவடிக்கையை தொடங்கும் முன்பும் பிரதேச சபையினருடன் தொடர்பு கொண்டு முன் அனுமதி பெறப்படுவதும் வீடுகளுக்கு குடிபுகுதல் சான்றிதழ் பெற்றுக்கொள்வதும் சட்டப்படி மேற்கொள்ளப்பட வேண்டிய கருமமாகும். இதனை கடைப்பிடிக்காதோருக்கு எதிராக உள்ளூராட்சி சட்டத்தின் கீழ் அனுமதியற்ற கட்டிடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழ் திரட்டப்படும் ஒவ்வொரு ரூபா பணமும் அவ் உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளின் அபிவிருத்திக்கே முதலிடப்படுவதனால் வரி வருவாய் திரட்டுதல் சட்டப்படி இடம்பெற வேண்டும். புதிய அபிவிருத்தி நிதிக்காக சோலை வரி, ஏக்கர் வரி ஆகியவற்றை அறவிடக்கூடிய அடிப்படைத் தகுதி விதிகள் உருவாக்கப்படல் வேண்டும். நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மிக விரைவில் உப நகரமாக பிரகடனப்படுத்தும் தகுதி பளை நகர பிரிவுக்கு உள்ளதனால் பிரதேச சபை தனது அதிகாரத்துக்குட்பட்ட அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். குறிப்பாக சுற்றாடலை பேணுவதற்கு பச்சை பொருளாதாரம் (Green Economy) ஒன்றை கட்டியெழுப்புவதற்கும் தேவையான சமூக காடுகள் வளர்த்தல், வீதியோர மரநடுகை, பண்ணை முறையான மரநடுகை, கன்னா காடுகளை பேணுதல், உவர் நீர் தடுப்பு, காடுகளை உருவாக்கல் போன்ற பேண்தகு முயற்சிகளிலும் தமது பங்கை செலுத்தியே ஆக வேண்டும். வீதி விளம்பரப் பலகைகள் வகை தொகையின்றி அமைக்கப்பட்டு வரும் நிலையில் இதிலிருந்து போதிய வரி வருமானம் சபைக்கு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பிரதேச சபையினால் பராமரிப்பு செய்யப்படும் குடிநீர் வழங்கல் சேவையை நிறைவு செய்வதற்காக 3 பவுசர்கள் மூலம் நாளாந்தம் 300 லீற்றர் சுத்தமான குடிநீர்

விநியோகிக்கப்பட்டு வருவதுடன் 170 பொதுக் கிணறுகளும், 09 குழாய்க் கிணறுகளும் சபையினால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. கடினமான வறட்சிக் காலங்களில் இத்தேவை மேலும் அதிகரிக்கப்பட்டு உள்ளதாயினும் கோயில் வயல் பகுதியில் விநாயகபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது போன்ற கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் பளை நகரை மையப்படுத்தியும், கிளாலியை மையப்படுத்தியும் அமைக்கப்படல் வேண்டும். குறிப்பாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தின் பிரதான நீர்க் கிடங்கும், நீர்த் தொட்டியும் இப்பிரதேசத்தில் அமைக்கப்படுவதால் இதிலிருந்து நகர்ப்புற நீர்வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படல் வேண்டும். குழாய்க் கிணறுகள் அமைப்பது தொடர்பில் பிரதேச சபைகள் தமது அனுமதி வழங்கும் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி ஆய்வு செய்து அனுமதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வீதிவிளக்குகளை முறைப்படி அமைத்தல் பேணுதல் தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஒரு குறுகிய மட்ட அளவில் தான் தனது வீதிவிளக்குகளை அமைத்துள்ளது. மின்சாரத்துக்கு பதிலாக சூரிய சக்தியை பாவித்து வீதிவிளக்குகளை பிரதான பாதைகளுக்கு அமைத்துக் கொள்வதுடன் கிராமப்புற வீதிகளில் ஒவ்வொரு குடும்பத்தவரும் தனது கதவில் ஒரு மின்சார பல்பை பொருத்துவதற்கு மக்களை விழிப்புணர்வு ஊட்டப்படல் வேண்டும். மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்குகளை பொருத்தி செலவுச் சுருக்கமான முறையில் இவ்வினைத்திறனான தீர்மானத்தை அமுலாக்க முடியும். நாடே வெளிச்சம் திட்டத்தின் கீழ் இப்போது அனைவருக்கும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் இந்த “வீதிக்கொரு விளக்கு” என்ற திட்டத்தினை பொதுமக்கள் பங்குபற்றுதலுடன் முன்மாதிரியாக செயல்படுத்தல் வேண்டும்.

A9 நெடுஞ்சாலையில் அன்றாடம் ஏற்பட்டு வரும் வாகன விபத்துக்களால் அதிக இறப்பை சந்திப்பது நாய்களும், பூனைகளும், ஆடுகளும், மாடுகளுமாகும். இவை பிரதான வீதியில் சுமார் 18km நீளமான பகுதியில் தினமும் இடம்பெற்று வருகின்றது. இதனைத் தவிர்க்க கட்டாக்காலி மாடு, ஆடுகளுக்கு எதிராக உள்ளூராட்சி சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதுடன் வளர்ப்பு நாய்களுக்கான நாய் தகடுகளும் வழங்குவதும் அவசியமாகும்.

ஒவ்வொரு வருடமும் நீதிவான் நீதிமன்றத்தினால் திரட்டப்படும் சட்டவிரோத தண்டங்களும், குற்றப்பணங்களும் பிரதேச சபைகளுக்கு வழங்குவதன் நோக்கம் போதியளவு கிராமிய முதலீட்டை வழங்குவதன் மூலம் குற்றங்களை செய்யும் வாய்ப்பை குறைப்பதற்கே ஆகும். இவ்வகையில் காலத்துக்கு காலம் சாரதிகளுக்கும், மாணவர்களுக்கும், பாதசாரிகளுக்கும் வீதி விதிகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமலர்வுகளை நடாத்துவதுடன் ஆபத்தான பிரதேசங்கள் என்ற அறிவிப்பு பலகைகளும் பொருத்தப்படல் வேண்டும். சட்டவிரோத முறையில் விரைவாக அழிக்கப்பட்டுவரும் பனை மரங்களுக்கு பதிலாக புதிய நடுகைகளை மேற்கொள்ள போதிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பனை அபிவிருத்தி சபைக்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மரம் தறிப்பதற்கான வரி வழங்கப்படல் வேண்டும். இவ்வகையில் பல்வேறு வளப்பற்றாக்குறையுடனும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பல நல்ல சேவைகளை வழங்கி மக்களின் ஆட்சி மன்றமாக செயல்படுவதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அதன் சேவைகள் புதிய எதிர்பார்ப்புக்கும் பணியாற்ற வேண்டும் என்பதே இப்பிரதேசத்தவரின் எதிர்பார்ப்பாகும்.

# பொது வழிகள் மீதான பிரதேச சபையின் அதிகாரங்களும் கடமைகளும்

**திருமதி. செ. அனுஷியா**
செயலாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

உள்ளூர் மட்டத்தில் நிருவாக, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் பங்குபற்றுவதற்குப் பெருமளவு வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் நோக்குடன் தாபிக்கப்பட்ட சட்டவாக்க அமைப்புக்களே உள்ளூர் அதிகார சபைகள் ஆகும். சட்டவரையறைக்குள் சுதந்திரமாக செயற்படும் அதிகாரம் கொண்ட அமைப்பாகும்.

இதில் பிரதேச சபைகளின் தத்துவங்களையும் பணிகளையும், கடமைகளையும் குறித்துரைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட சட்டமே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் ஆகும்.

பிரதேச சபையானது தனது எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் , பகிரங்க பொது வழிகள் என்பன தொடர்பான கருமங்களை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல் நிர்வாகம் என்பவற்றின் ஊடாக மக்களின் சௌகர்யத்தினையும், வசதிகளையும், சேமநலன்களையும் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் அப்பிரதேச சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை ஒன்று ஆரம்பித்த திகதியன்று இருக்கும் கட்டடம் அல்லது எல்லைச்சுவர் / வேலி ஒன்றுக்கு செய்யப்படும் பழுது பார்த்தல் விடயத்தில் பாதசாரிகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது 25’ குறையாததுமான தெரு அல்லது குப்பை

பெருக்கும் அல்லது மலமகற்றும் நோக்கங்களுக்காக அல்லது சிறப்பான சுகாதார நோக்கத்திற்காக ஒதுக்கப்படும் 10' குறையாததுமான ஒழுங்கையின் இடைவெளி விடயத்தில் மட்டும் பிரதேச சபையால் வழங்கப்படும் அனுமதியின்றி அத்தகைய பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளலாம்.

பழுது பார்த்தல்கள் என்பது மீள நிறுவும் / மீள நிர்மாணிக்கும் / புதிய பாகம் எதனையும் சேர்க்கும் என்ற வேலையை உள்ளடக்குவதாக கருதக்கூடாது.

சட்டத்தின் மூலம் ஏதேனும் அதிகார சபைக்கு பாரப்படுத்தப்பட்ட பிரதான பொது வழிகள் தவிர்ந்த எல்லாப் பொது வழிகளினதும் நிர்வாக அதிகார சபையாக பிரதேச சபை செயற்பட வேண்டும்.

பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாக உள்ள சகல பொது வழிகள் / அவற்றின் இடப்பரப்புக்கு மேலான திறந்த வெளிகள் என்பவை தொடர்பாக எழும் எல்லா பகிரங்க உரிமைகளையும் அக்கறைகளையும் வாழ் வசதிகளையும் பேணுவதற்கும் உறுதிப்படுத்துவதற்குமான தத்துவங்களை பிரதேச சபை கொண்டுள்ளது.

பிரதேச சபையினால் பேணப்படும் வீதிகளின் எல்லைகளை நிரந்தர அடையாளங்கள் மூலம் எல்லை குறித்து அத்தகைய எல்லா வீதிகளினதும் வரைபடங்களை தயாரித்தலும், அத்தகைய வீதிகளின் நிரலினை எடுத்துக் காட்டும் அறிவித்தல்களை ஒழுங்கு விதிகள் மூலம் வர்த்தமானியில் வெளியிடுதலும் ஒவ்வொரு பிரதேச சபையினதும் கடமையாகும்.

பிரதேச சபையின் இடப்பரப்புக்குள்ளாக புதிய வீதிகளையும், பாலங்களையும் வகுத்து நிர்மாணிக்கும் நோக்கங்களுக்காக தேவைப்படும் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரர்களுக்கு / இருப்பாட்சியாளர்களுக்கு முறையான நட்ட ஈட்டைச் செலுத்தி அவற்றினை நிர்மாணிக்கலாம். (27)

பொது வழி ஒன்றை திசை திருப்புதல், விரிவாக்குதல், சீர்திருத்தல் தொடர்பில் ஏதேனும் காணியை உடைமையில் எடுத்தல் அவசியமாயின் அக்காணிக்காகவும், அதிலுள்ள கட்டடம், எல்லைச் சுவர், வேலி அல்லது மரம் எதற்கும் நட்ட ஈட்டுக்கென பணக்கொடுப்பனவு செய்வதன் மூலம் / மாற்றாக வேறு காணியை கொடுப்பனவு செய்வதன்மூலம் தேவைப்படும் நிலத்தை கொள்வனவு செய்யலாம்.

பொது வீதி ஒன்றை திசை திருப்புதல், விரிவாக்குதல், சீர்திருத்தல் தொடர்பில் ஏதேனும் நபரின் காணியினை உடைமையில் எடுத்தல் பிரதேச சபைக்கு அவசியமாக இருந்தாலும் அக்காணியின் சொந்தக்காரர் அதற்காக பிரதேச சபைக்கு காணியை கொடையாகக் கொடுக்க விரும்பினால் தவிசாளர் / அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரின் முன்னிலையில் அக்காணி உரிமையாளரின் எழுத்திலான பதிவு ஒன்று காணியை பிரதேச சபைக்கு உரித்தாக்க போதுமானதாகும்.

பிரதேச சபைக்குரிய ஏதேனும் வீதியினை / அதன் பாகம் பயன்படுத்தப்படாது விட்டால் பிரதேச சபை அமைச்சரின் முன் அங்கீகாரத்துடன் அதனை விற்கலாம் அல்லது குத்தகைக்குக் கொடுக்கலாம்.

ஏதேனும் பொது வழியை அடுத்துள்ள வீடு, கட்டடம், எல்லைச் சுவர் பாழடைந்து அபாயகரமாக அல்லது விழக்கூடிய சாத்தியம் கொண்டதாக இருப்பின் பிரதேச சபையானது அவ்வாறான பகுதியை உடனடியாக பழுதுபார்க்கும்படி காணி உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் மீது எழுத்தினாலான அறிவித்தலை சேர்ப்பித்தல் வேண்டும். இருப்பாட்சியாளர் 3 நாட்களுக்குள் அவ் அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தொடங்காவிடில் பிரதேச சபை அவ்வேலையை செய்தல் வேண்டும். அதற்காக செலவு முழுவதனையும் உரிய நபரினால் செலுத்தப்பட வேண்டும்.

பிரதேச சபை இடப்பரப்புக்குள் வாகனப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படுவதும் வீடமைப்பு, நகர சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் எந்த வீதி தொடர்பில் 50 அடிக்கு மேற்பட்ட பாதை ஒன்றுக்காக ஏற்பாடு செய்யும் தெரு எல்லைக் கோடுகள் வரையறுக்கப்படாது காணப்படினும் அவ் வீதியின் மத்தியிலிருந்து 25 அடி கொண்ட வரம்பொன்றுக்குள் (கட்டட வரம்பு) ஏதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை, வேலியை நிறுவுவதாயின் அக்காணி பகிரங்க நோக்கங்களுக்காகத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் நட்ட ஈடு எதுவும் கோராது பொறுப்பேற்பு ஒன்றை எழுதி நிறைவேற்றுதலின் பெயரில் குறித்த அமைப்புக்களை அமைப்பதற்கு அனுமதிக்க பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு பிரதேச சபையும் அது அமைக்கப்பட்ட திகதிக்கு பின்னர் 3 ஆண்டுகளுக்குள்2 அல்லது சிறப்பான சந்தர்ப்பங்களில் அமைச்சரால் அனுமதிக்கக் கூடியவாறான காலப்பகுதியில் அல்லது அமைச்சரின் பணிப்பின் மீது கட்டட வரம்பினை அல்லது நிரந்தரமான குறிகள் மூலம் வரையறுக்க வேண்டும்.

பிரதேச சபையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதேச சபை எல்லைகளுக்குள் ஏதேனும் கட்டடத்தை அல்லது எல்லைச் சுவரை நிறுவினாலோ அல்லது சேர்ப்பு எதனையும் செய்தாலோ அத்தகைய அமைப்பினை அகற்றுவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

பொது வழி ஒன்றின் மீதான அவ்வாறான சட்ட முரணான அமைப்பை அகற்றுதல் / அகற்றுவித்தலுக்கான செலவுத் தொகைகளை அறவிடுதல் பிரதேச சபைக்கு சட்ட முறையாக்கப்பபட்டுள்ளது.

பொது வழி ஒன்றிற்கு ஊறுகளை விழைவிக்கும் எவரும் தவறொன்றுக்காக குற்றவாளியாதல் வேண்டும். பொது வழியின்

மேல் அல்லது பொது வழிக்குள் அதன் பயன்பாட்டை தடைசெய்யும் வகையில் கால் நடைகளை அல்லது வேறு விலங்கினங்களை அவிழ்த்து விட அனுமதிக்கும் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

பொது வழி மீது அல்லது பொது வழி அருகில் கட்டப்பட்ட அல்லது அலைந்து திரிகின்ற விலங்குகளை கைப்பற்றுதலும் அவ்வாறு கைப்பற்றப்பட்ட விலங்கை அந்த நோக்கத்திற்காக பிரதேச சபையால் தாபிக்கப்பட்ட பட்டியில் வைப்பதும் பிரதேச சபைக்கு சட்ட முறையானது.

பிரதேச சபையால் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவு இன்றியும் அவ்விலங்கு பட்டியில் வைக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகமான கொடுப்பனவு இன்றியும் அவ்விலங்கை உரிமையாளரிடம் ஒப்படைக்கக் கூடாது.

ஆளெவரும் விலங்கு கைப்பற்றப்பட்டதன் பின்னர் 10 நாட்களுக்குள் பட்டியில் வைக்கப்பட்டுள்ள விலங்கை உரிமை கோராது விடின் அல்லது உரிய கொடுப்பனவுகளை செலுத்தாது விடின் பிரதேச சபை அவ்விலங்கை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யலாம்.

அத்தகைய விலங்கை கைப்பற்றிய ஆளுக்குரிய தொகை பட்டியில் விலங்கின் கட்டுக்காவலுக்கும் பேணுதலுக்கும் ஏற்பட்ட செலவு என்பவற்றை ஈடு செய்த பின்னர் எஞ்சிய தொகையை வைப்பில் வைத்திருத்தல் வேண்டும். விற்பனைத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் அதற்கு உரிமை கோரப்படாவிட்டால் அதனை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும்.

பொது வழிகளின் சிறப்புப் பயன்பாடு என்னும் வகையில் ஏதேனும் பிரதேசசபை, தனியாகவோ வேறேதும் உள்ளூராட்சி சபையுடன் கூட்டாகவோ - சட்டத்தால் அமைத்துருவாக்கப்பட்ட குழுவுடன், மின்வலு, நீர் விநியோகம் அல்லது பகிரங்க சேவை

வழங்கும் நோக்கில் அத்தகைய ஊக்குனர்களுடன் பிரதேசசபையின் அபிப்பிராயப்படி அவசியமான எல்லா வேலைகளையும் அதற்கான எல்லா நிறுவுகைகளையும் பொறிகளையும் அமைப்பதற்கும் உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ளலாம்.

பிரதேச சபை கட்டுப்பாடு செலுத்தும் பொதுவழியின் மீது மிதமிஞ்சிய பாரம் எதுவும் ஏற்றிச் செல்வதனால் அப் பொது வழியை பேணுவதில் அசாதாரண செலவுகள் ஏற்படும் என பிரதேச சபைக்கு தோன்றுமிடத்து நீதிமன்றம் ஒன்றின் தீர்வை நாடி அத்தகைய செலவுகளின் தொகையை உரிய செலவுக்கு பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடலாம். இவ்வாறான வழக்கு நடவடிக்கைகள் செலவுகள் நிகழப்பட்ட நேரத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். யார் எவரும் மித மிஞ்சிய பாரத்தினை கொண்டு செல்வதனால் ஏற்படும் நட்ட ஈட்டை சபைக்கு கொடுப்பனவு செய்வதற்கென பிரதேச சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளலாம்.

ஏதேனும் பொதுவழிமீது வேலையமைப்பதற்கு பொறுப்பாயுள்ள பிரதேச சபையின் அலுவலர் அல்லது பிரதேச சபையின் கீழுள்ள ஒப்பந்தகாரர் ஒருவர் அப்பொது வழியின் மீது கற்குவியலையோ வேறெந்தப் பொருளையோ விட்டுவைப்பதனால் அப்போது வழியால் செல்லும் எவரிற்காவது அபாயம் ஏற்படின் குறித்த செயலுக்கு பொறுப்பானவர் தண்டிக்கப்படக்கூடிய குற்றவாளியாவார்.

பொலிஸ் படையிலுள்ள அலுவலர்களும் எல்லா கிராமசேவை அலுவலர்களும் அவர்கள் எந்த இடப்பரப்புக்கென நியமிக்கப்படுகிறார்களோ அப்பகுதியில் இவ்வாறான தவறுகளைத் தடுப்பதில், உதவிபுரிதலும், துணை புரிதலும் பொதுவாக அவர்களது கடமையாதல் வேண்டும்.

# பிரதேசசபையின் சேவை வழங்கல்...

திருமதி சுபாஜினி பத்மலகீந்திரன் (B.A. (Hons))
அபிவிருத்தி உத்தியோகத்தர் - 11
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை.

பழைமை வாய்ந்த பளை நகரில்
பிரகாசமாய் மிளிர்கின்றது
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

கருவறை தொட்டு கல்லறை வரையும்
கனிவுடனே மக்களுக்கு சேவை தனைப் புரிகிறது

பதினெட்டு டிவிசனை அங்கமாய் அடக்கி ஓர் முகமாய்
ஓர் உயிராய்
அணையாத ஓர் ஒளியாய் பிரகாசம் தருகிறது

இருநூற்றுத் தொண்ணூற்று நான்கு வீதிகளின் நாயகனாம்
சிறப்பு மிகு சந்தையை சீர் மிகு ஆலயத்தை
செழிப்புடனே கல்விச்சேவை சிறந்திடவே வழங்கியது
பத்திரிகை போட்டு நிதம் பாடம் தனைப் புகட்டிடவே
நூலக சேவையது நூர்ந்திடாது ஒளிர்கிறது

சமூகத்தில் அபிவிருத்தியை நிலைபெறச் செய்திடவே
சனசமூக நிலையங்களை சரியாமல் உயர்த்தியது.
வீரர்களை விளைத்திடவே விளையாட்டுக் கழகத்தை
வினைத்திறனாய் விளைவித்தது.

சுற்றுச் சூழலுடன் குடிநீரை சுத்தமாக்கி வழங்கி
ஆயுர்வேத முறையினால் ஆயுளைக் கூட்டியது.
முகமாலை முள்ளிப்பற்று கூடவே புலோப்பளையும்

மூன்று உப அலுவலகங்களும் வருமான முதுகெலும்பாம்
நிதிக்கிளையும் நிர்வாகமும் திட்டமிடலும் பொதுப்பிரிவும்
ஒன்றிணைந்து சேவைதனை ஓங்கிடவே செய்கிறது.

வருமானம் குறைவெனினும் வளமான சேவையதை
சரியான நேரத்தில் சழைக்காமல் சபை செய்யும்

ஒற்றுமையாய் ஒன்றிணைந்து ஓங்கிடவே சபை செய்வோம்
நற்பெயரைக் காத்து நாமும்
நல்லாட்சி செய்திடுவோம்.

ஈர்நான்கு எட்டு மணித்தியாலங்களும் மக்களுக்காய்
சேவை செய்வோம்
மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உணர்வோம்.

❁★❁★❁★❁★❁

## வெற்றியின் இரகசியம்

| | | |
|---|---|---|
| அன்பு காட்டு | - | ஆனால் அடிமையாகி விடாதே! |
| இரக்கம் காட்டு | - | ஆனால் ஏமாந்து விடாதே! |
| பணிவாய் இரு | - | ஆனால் கோழையாய் இராதே! |
| கண்டிப்பாய் இரு | - | ஆனால் கோபப்படாதே! |
| சிக்கனமாய் இரு | - | ஆனால் கஞ்சனாய் இராதே! |
| வீரனாய் இரு | - | ஆனால் போக்கிரியாய் இராதே! |
| சுறு சுறுப்பாய் இரு | - | ஆனால் பதட்டப்படாதே! |
| தர்மம் செய் | - | ஆனால் ஆண்டியாகி விடாதே! |
| பொருளைத் தேடு | - | ஆனால் கடவுளை மறந்து விடாதே! |

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் இயற்கை வளங்கள்

*திரு. சி. புவனராசா*

நிர்வாக கிராம அலுவலர்
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.

*"வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி"*

இப்பிரதேசத்தின் வடபகுதியில் முகமாலையில் இருந்து கோயில் வயல் வரையும் தென்பகுதியில் கிளாலியில் இருந்து கோயில் வயல் வரையும் தொண்டமனாற்றோரமும் கிளாலியில் இருந்து கோயில் வயல் வரையுள்ள யாழ் கடல் நீரேரிப்பகுதியிலும் இச்சதுப்பு நிலப்பிரதேசக்காடுகளும் அதை அண்மித்த பிரதேசத்தில் நிலக்கீழ் ஊரிப்படையும் காணப்படுகின்றது. அத்துடன் இயற்கைக் காடுகள் பல பகுதிகளிலும் பனை வளம் எல்லாப்பகுதியிலும் காணப்படுகின்றது.

இச்சதுப்பு நிலக்காடுகள் பல வகையில் இப்பிரதேச மக்களிற்கு நன்மை பயக்கின்றது. நீர் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்திற்கு பாதுகாப்பையும் அதற்கேற்ற சூழலையும் அமைத்துக் கொடுப்பதால் கடல் வாழ் உயிரினங்களான நண்டு, இறால், மீன் போன்றவை இனப்பெருக்க காலத்தில் இம்மர ஓரத்தை நாடி வருகின்றன. இனப்பெருக்க காலத்தின் பின் கடலை நாடிச்செல்கின்றன. இவ்வாறே தொண்டமனாற்று கண்டல், கண்ணா, பொறுபத்தை பாதுகாப்பில் இங்கு வாழும் ஆற்று நீர்வாழ் உயிரினங்கள் தமது இனப்பெருக்க காலத்தைக் கழித்து பாதுகாப்பையும் பெறுகின்றன. இவ்வாறே இவற்றின் வாழ்க்கைச் சுற்றோட்டம் அமைவதால் அதை நம்பி தமது தொழிலாகக்கொண்டு வாழும் மீனவர்களிற்கு தொழிலும் வருமானமும் கிடைப்பதுடன் அவர்களின் வாழ்க்கையும் வளம் பெறுகின்றது.

அதுமட்டுமல்லாது இச்சதுப்பு நிலக்காடுகளில் வளரும் மரங்களான கண்டல், கண்ணா, பொற்பத்தை, தில்லை, தீரி போன்ற மரங்களின் கிளைகளின் மேல் கூடுகட்டி கூட்டம் கூட்டமாக பறவை இனங்கள் வாழ்கின்றன. இங்கு ஆற்றில் காணப்படும் சதுப்புநிலக்காடுகளின் சிறு தீவுகளிலும் கடற்கரையோர சதுப்பு நிலக்காடுகளிலும் காகக்கூட்டங்களும். வெளவால் கூட்டங்களும் கொக்குக் கூட்டங்களும் நாரை, நத்தை கொத்தி, ஊசிமூக்கன் மற்றும் சதுப்பு நில மரம் மேல் வாழ் பறவையினங்களும் தங்கள் வாழ்விடங்களாக இவற்றில் வாழ்வதால் இவற்றின் இனப்பெருக்க வாழ்க்கை வட்டமும் இங்கேயே இடம்பெறுகின்றது. இவை போடும் எச்சங்கள் கடல்வாழ் உயிரினங்களிற்கு உணவாகின்றது. ஆறு, கடல் வாழ் சிறு உயிரினங்கள் இவைகளிற்கு உணவாகின்றது. இவ்வாறே இரு கரையோரப் பிரதேசத்தின் இயற்கை சூழல் அமையப்பெற்றுள்ளது.

இச்சதுப்பு நிலத் தாவரங்களின் மூச்சு வேர்கள் அசுத்த காற்றை சுத்திகரிக்கும் தன்மை கொண்டதாக உள்ளது. தரையைப் பற்றிப் பிடிக்கும் தன்மை கொண்டதாக அமையப் பெற்றுள்ளதால் புயல்காற்றையும், வெள்ளப் பெருக்கையும் எதிர்கொண்டு சமாளிக்கும் தன்மை பெற்றுள்ளது. இக்காடுகள் கரையோர காற்றொதுக்காகவும், காற்றால் கொண்டு செல்லப்படும் பொருட்களை தடுத்து நிறுத்தியும் (மணல்) கடற்கரையோர கடலரிப்பை, ஆற்றுநீரரிப்பை தடுத்து நிறுத்துவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இக்காடுகள் உள்ள பிரதேசத்தில் நண்பகல் வேளையிலும் சூழல் குளிர்ச்சியாக காணப்படுகின்றது. இதனால் இங்கு பறவையினங்கள் பல்கிப்பெருகி வாழ்வதற்கு வாழ்விடமாகின்றது. இங்கு காணப்படும் பறவைகளின் வாழ்விடங்கள் ஓர் இன குழு ரீதியான இருப்பிடங்களாகவே காணப்படுகின்றது. பறவைகளின் வாழ்விடங்களை மையமாக வைத்தே ஆற்றுக்குள் காணப்படும் தீவுகளும் காக்கை தீவு, கொக்குத் தீவு, வெளவால் தீவு, நாரைத் தீவு என்ற பெயர்கள் வழக்கில் உள்ளது. இவ்வாற்றில் முதலை, செம்மூக்கன் முதலை

என்பன பெருமளவில் வாழ்கின்றன. இவை கடற்றொழில் செய்வோருக்கு மிகவும் சிரமத்தைக் கொடுக்கின்றன.

சதுப்பு நிலக்காடுகள் விறகுத் தேவைக்காகவும் மீன்பிடி வலைகளிற்கு சாயம் போடுவதற்காகவும் வெட்டப்படுகின்றன. இதனால் இயற்கைச் சூழல் மாற்றத்திற்கு உட்படுகின்றது. சூழல் மாற்றத்தால் பறவைகளின் வாழ்விடங்களும் மாற்றத்திற்கு உள்ளாகின்றதை எம்மால் கண்கூடாக காணமுடிகின்றது. இங்கு வாழும் பறவையினங்கள் நிரந்தரமாக இங்கு தங்கி வாழ்வதால் இங்கேயே இவற்றின் இனச்சந்ததிகள் பரம்பரை பரம்பரையாக வாழும் வாழ்கை முறையை உடையனவாக உள்ளன.

கடந்த கால யுத்த சூழ்நிலையில் இப்பிரதேசங்களும் பறவை இனங்களும் கடும் பாதிப்புக்களை அடைந்தமையினால் அவற்றின் எண்ணிக்கைகள் கணிசமாக 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற காலத்தின் போது குறைந்திருந்ததாக அவதானிக்க முடிந்தது. தற்போது அப்பிரதேசங்கள் அமைதிப் பிரதேசங்களாக உள்ளமையினால் பறவையினங்களின் அதிகரிப்பையும் அவற்றின் பறப்பின் போது கூட்டங்களில் பறக்கும் பறவைகளின் எண்ணிக்கையையும் அவதானிப்பதன் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அதைவிட இப்பகுதிகளில் குறித்த பருவ காலங்களின் போது வெளிநாடுகளில் இருந்து வரும் பறவைகளும் வருகின்றன. சூழலில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்றவாறு இவை இப்பிரதேசங்களிற்கு வருகின்றன. மீண்டும் குறித்த காலத்தின் பின் சூழல் மாற்றம் அடைய இவைகளும் அப்பகுதியை நோக்கி நகர்கின்றன. உதாரணமாக செம்பவளநாரை, கடல் வாத்து, கடல் தாரா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவைகளின் நகர்வுகள் கண்டங்களுக்குக் கண்டம் நகர்வுகளை மேற்கொள்பவையாகவும் நாடுகளிற்கு நாடு நகர்வுகளை பருவநிலைக்கேற்ப மேற்கொள்பவையாகவுமுள்ளன.

கரையோர ஊரிப்படையானது கடல்நீர், ஆற்றுநீர் என்பன தரைப்பகுதிக்குள் உட்புக முடியாதபடி தடுக்கும் நிலப்பரப்பில் பரவியுள்ளது. இப்பகுதி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கால் நடைகளின் மேய்ச்சல் நிலப்பிரதேசத்தில் கூடுதலாகக்

காணப்படுகின்றது. இவ்வூரிப்படை கரையோர உலர் நிலக் கீழ் நீரின் உப்புத்தன்மையை குறைக்கும் ஓர் செயற்பாட்டுப் படையாகவும் உள்ளது. ஓர் ஊரி ஈர் ஊரி ஆகுவதற்கு 30 ஆண்டு தொடக்கம் 50 ஆண்டுகள் ஆகலாமென கூறுகின்றனர். இவ்வூரிப்படையானது அகழ்ந்து வீதித்தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதால் அகழப்படும் பாரிய குழிகளில் கரையோரப் பகுதிக்குள் கடும் உப்பு நீர் மாரிகாலத்தில் உட்புகுந்து தேங்கிவிடுகின்றது. இதன் மூலம் இப்பகுதியை அண்டிய குடியிருப்பு நீர்நிலைகள் கிணறு, குளம், வயல் வெளிகள் உவர்த்தன்மை அடைந்து பயிர்ச்செய்கை பாதிப்படைகின்றது. மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது.

இப்பிரதேசங்களில் இயற்கையாகக் காணப்படும் சதுப்பு நிலக்காடுகளும் இவ்வூரிப் பிரதேசங்களில் காணப்படும் ஊரிப்படையும் அழிக்கப்படாது பாதுகாக்கப்பட வேண்டும். இதன் மூலம் இயற்கைச் சூழல் மாற்றமடையாது பேணப்பட முடிவதுடன் உவர்நீர் உட்பகுதிக்குள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும். அத்துடன் மக்களின் இருப்பை இடப்பெயர்வு ஏற்படாது நிறுத்த முடியும். தொண்டமனாறு கடல் நீர் ஏரியும் யாழ் கடல் நீர் ஏரியும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கடல் நீரேரியும் உப்புச் செறிவு கூடிய நீரைக்கொண்டுள்ளதால் இதை அண்டிய பிரதேசத்திற்கு இந்நீர் ஊடுருவும் போது நன்னீரை உப்பு நீராக மாற்றும் தன்மை கூடுதலாகக் காணப்படுகின்றது. கரையோரப் பிரதேசம் அகழப்படாது பாதுகாக்கப்படுவதுடன் இயற்கை அமைப்பு முறையில் காணப்படும் கரையோர தடுப்பு முறையும் மாற்றமடையாது பாதுகாக்கப்படும். இயற்கை அமைப்பில் மாற்றம் ஏற்படுவதால் அதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கின்றது.

இப்பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளமான பனை வளமும், இயற்கைக் காட்டு வளமும் கடந்த கால யுத்த சூழ்நிலையால் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் மழை வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கைக் காடுகளும், வளர்ப்புக் காடுகளும், பனை வளமும் பெருந்தோட்டப் பயிரான தென்னை வளமும் முக்கிய பங்கை வகிக்கின்றன. இயற்கைக் காடுகள் விறகுத் தேவைக்காகவும், யுத்த காலப்பகுதியிலும்

பெருமளவு அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் மழை வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் பனை வளம் வளர்ந்த பனை மரங்கள் சுமார் 85% உம் தென்னை மரங்கள் 90% உம் வளர்ப்புக் காடுகள் (forest) சுமார் 85% அழிக்கப்பட்டுள்ளது. இப்பெருமரங்களே இப்பிரதேசத்தின் மழை வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியது. தற்போதய நிலையில் இவ்வளங்கள் அழிக்கப்படாது பாதுகாக்கப்பட வேண்டியதும், மீள் நடுகை செய்யப்படவேண்டியதும் இன்றியமையாதது மட்டுமல்லாது ஊக்குவிக்கப்பட வேண்டியதும் மிகமுக்கியமான தேவையாகும்.


கடந்த யுத்த காலத்திற்கு முன்னர் இங்கு இயங்கிய காட்டுத் திணைக்களம் மீளத் திறக்கப்பட்டு பெருமரங்கள் மீள் நடுகை செய்யப்பட வேண்டும். தென்னைச் செய்கை அழிந்த தோட்டங்கள் மீள் நடுகைக்கு திட்டமிட்ட முறையில் உள்வாங்கப்பட வேண்டும். பனை மரங்கள் திட்டமிட்ட முறையில் தரிசு நிலங்களில் நடுகை செய்யப்படுவதுடன் தென்னந்தோட்டங்களின் இடையிடையே நாட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளவதன் மூலம் இவற்றின் எண்ணிக்கையை உயர்த்தி எதிர்காலத்தில் பெருமரங்களின் எண்ணிக்கையை வளர்ச்சியடையச் செய்து எதிர்கால மழை வீழ்ச்சியைக் கூட்ட முடியும்.


இப்பிரதேசத்தின் இருகரையோரமும் உவர்நீர் உட்புகா வண்ணம் அணை கட்டப்பட வேண்டும். இவ் அணை கட்டுவதால் இப்பிரதேசத்தின் இயற்கை நிலையைப் பாதுகாக்க முடிவதுடன் பயிர்ச்செய்கையில் உவர் நீரின் தாக்கத்தையும் குறைக்க முடியும். உவர் நிலம் என்று எதையும் ஒதுக்கி விடாது முழுநிலத்தையும் பயன்பாட்டிற்கு உட்படுத்த முடியும். இவ்வாறான செயற்றிட்டங்களை செயற்படுத்தாவிட்டால் எதிர்காலம் செழுமை அடைவதை எவராலும் எதிர்பார்க்க முடியாது. இயற்கை வளங்களை பாதுகாக்க முடியாது இறந்த காலம் சென்று விட்டது. நிகழ்காலத்தில் சிந்தித்து செயற்படுத்தினால் எதிர்காலம் சிறப்படையும்.

“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையாலும் கெடும்”

# தேசிய விருது - 2014ன் பதிவுகள்





# தேசிய விருது - 2014ன் பதிவுகள்






## தேசிய விருது 2016 நிகழ்வுகளின் பதிவுகள் - 2015






## தேசிய விருது 2016 நிகழ்வுகளின் பதிவுகள் - 2015


NATIONAL LIBRARY
AND
DOCUMENTATION SERVICES BOARD
MINISTRY OF EDUCATION

*This is to certify that*

Puloppallai Public Library of
Pachchilaipalli Pradeshiya Sabha


*Successfully conducted the*

National Reading Month Programme
October 2015

*Your contribution towards this noble project is very much appreciated.*

Chairman

Director General






# உன் முகவரியைத் தேடி....

**திருமதி. மாவை செந்தூரன் றெசிந்தா**
சங்கத்தார்வயல், இயக்கச்சி.

எனக்கென்றொரு முகவரி தந்தவள் நீ
அன்பே - எனக்கு உறவாக இருந்து
எனக்கும் முகவரி உண்டு என்பதை
அறிய வைத்தவள் நீ
என் உயிரில் கலந்த உத்தமி நீ
இன்று காற்றோடு காற்றாக
கடலோடு கடலாக
மண்ணோடு மண்ணாக
கலந்தவளும் நீ தான்
அன்று என் சந்தோசத்திற்கு
துணையாக நின்றவள் நீ
இன்று என் விழிகள்
உறங்கும் போது கூட
உன்னையே தேடுகின்றது
உன்னைக் காணாது தவிக்கின்றது
இடைக்கிடை இரவில் மட்டுமே
உன்னைக் காண்கின்றேன்
நட்சத்திரங்களோடு நட்சத்திரங்களாக
நட்சத்திரங்களின் நடுவே
இடையிடையே மின்னுகின்றாய்
எனக்கு முகவரி தந்த நீ
இன்று பாழாய்ப் போன யுத்தத்தால்
நீ முகவரி இல்லாது இருக்கின்றாயே
அன்பே ! நான் இன்று
இரவு பகலாக எனக்கு முகவரி தந்த
உனது முகவரியையே தேடுகின்றேன்
நிச்சயமாக நீயும் உனது முகவரியும்
கிடைக்கும் என்ற நம்பிக்கையில்
உனது முகவரியைத் தேடி.....

# கிராம அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களுக்குள்ள பங்கு

# Role of Community Centers for Village Development

அ. சசிகுமார் (B.A (Hons),P.G.D.E)
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி

## கிராம அபிவிருத்தி

ஒரு கிராமத்தினுடைய அபிவிருத்தி என்பது அக்கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுகின்ற ஒரு பண்பு ரீதியான முன்னேற்றமாகும். உற்பத்தி, வருமானம் என்பவற்றின் அதிகரிப்புடன் வறுமை குறைவடைதல், வேலையின்மை குறைவடைதல், வருமான ஏற்றத்தாழ்வுகள் குறைவடைதல் என்பவற்றுடன் கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள், எல்லோருக்கும் வீடு, தனிமனித சுதந்திரம் போன்ற சமூகநல மானிட விருத்தியுடன் ஏற்படுகின்ற ஒரு முன்னேற்றத்தையே கருதுகின்றது.

உலக வங்கியின் கருத்துப்படி கிராமிய அபிவிருத்தி என்பது "குறைவான வருமான மட்டத்தில் வாழ்கின்ற கிராம மக்களின் உற்பத்தித்திறன் வருமான மட்டம் என்பனவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் வறுமையிலிருந்து கிராம மக்களை விடுவிப்பது தொடர்பான ஒரு செயன்முறையே" கிராமிய அபிவிருத்தி எனப்பட்டது.

ஒவ்வொரு கிராமங்களும் அபிவிருத்தி அடைவதன் மூலமே பிரதேச, நகர, மாவட்ட, மாகாண, தேசிய அபிவிருத்திகள் ஏற்பட முடியும். ஒரு நாட்டில் நீண்டகால பொருளாதார வளர்ச்சி, நிலைபேறான அபிவிருத்தி என்பன ஏற்படவேண்டுமாயின் கீழ் மட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களும் வளர்ச்சியடைதல் அவசியமாகும்.

இதனாலேயே தேசிய அரசாங்கம் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது கிராம மட்டங்களிலிருந்து அபிவிருத்தி ஏற்படும் வகையில் கொள்கைகளை வகுப்பதையும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதையும் தற்காலங்களில் அவதானிக்க முடியும்.

## கிராம அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டுமானங்கள்

இத்தகைய கிராமிய அபிவிருத்திகள் ஏற்படவேண்டுமாயின் அக்கிராமத்தின் பொருளாதார, சமூக உட்கட்டுமானங்கள் விருத்தியடைதல் அவசியமாகும். வீதிகள், பாலங்கள், மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், சிறுகைத்தொழிற்சாலைகள், பாடசாலை, முன்பள்ளி, சுகாதார நிலையம், சனசமூக நிலையம், விளையாட்டு மைதானம், பொதுநோக்கு மண்டபம், கலாச்சார மண்டபம், சமய வழிபாட்டுத் தலங்கள் போன்ற கட்டுமானங்கள் கிராமிய அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டுமானங்கள் ஆகும்.

ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய கட்டுமானங்கள் விருத்தியடையும்போதே மக்களின் பொருளாதார, சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் விருத்தியடைந்து எல்லாமக்களதும் வாழ்க்கைத்தரத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்படும். அதுவே கிராமிய அபிவிருத்தியாகவும் கொள்ளப்படும்.

# கிராம அபிவிருத்திக்கு சமூகமட்ட அமைப்புக்களின் அவசியம்

ஏதேனும் குறிப்பிட்ட இடப்பரப்பினையோ அல்லது பொருளாதார, சமூக, கலாசார, சமய மற்றும் தொழில் ரீதியாக அல்லது இவற்றில் எதனை அடிப்படையாகக் கொண்டோ ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து வாழுகின்ற மானிடத் தொகுதியே சமூகம் எனப்படும். இத்தகைய சமூகத்தை பிரதிபலிக்கின்ற அமைப்புக்களே சமூக மட்ட அமைப்புக்கள் ஆகும்.

கிராமிய உட்கட்டுமானங்களை விருத்திசெய்வதற்கு பெருந்தொகை நிதி தேவைப்படும். இதனால் உடனடியாகவோ அல்லது முழுமையாகவோ அரசாங்கத்தினாலோ அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ வேறு நன்கொடையாளர்களாலோ இவற்றை பூர்த்தியாக்க முடியாது. வரையறுக்கப்பட்ட நிதி வளங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள் பகிர்ந்தளிக்கின்றபோது தமது கிராமத் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி நிதி ஒதுக்கீடுகளை தமது கிராமத்திற்கு எடுத்துச்செல்வதும் மக்களது பங்கேற்புடன் அவற்றை செயற்திறனாக நிறைவேற்றுவதும் அப்பகுதி கிராம மட்ட அமைப்புக்களையே சாரும்.

**"சமூக மூலதனம்"** என அழைக்கப்படுகின்ற சமூகமட்ட அமைப்புக்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் பலமாக இருத்தல் கிராமிய அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்றாகும். சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, மீனவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் எந்தக் கிராமத்தில் பலமானவையாகவும், மக்களை ஒன்றுதிரட்டும் சக்தியாகவும் செயற்படுகின்றனவோ அந்தக்கிராமங்களே அதிகம் வளர்ச்சியடைந்திருப்பதை அல்லது வளர்ச்சியடைந்து வருவதை யாரும் அவதானிக்க முடியும். இவ்வகையில் ஒரு கிராமத்தினுடைய வளர்ச்சிக்கு சனசமூக நிலையமொன்று கிராமமட்ட சமூக அமைப்பு என்றவகையில் அரிய பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றவேண்டியுள்ளது.

## சனசமூக நிலையம் (Community Center)

சமூகம் ஒன்று தமது பொருளாதார, சமூக, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை பரிமாறி செயற்படுவதற்காக ஒன்றுகூடுகின்ற ஓர் இடம் சன சமூக நிலையம் என குறிப்பிடமுடியும். அதாவது ஒன்று கூடுதல், உணர்வுகளை பகிர்தல், அறிதல், அறிவுத் தேடல், விளையாடுதல் என சமூகத் தேவைகள் பலவற்றை பூர்த்தி செய்வதற்காக நிறுவப்படும் ஒரு சமூக நிறுவனமே சனசமூக நிலையம் ஆகும்.

சனசமூக நிலையங்கள் இலாப நோக்கமற்ற, சமய / சாதி சார்பற்ற, அரசியல் கட்சி சார்பற்ற, சமூக சேவையை முன்னிறுத்தும் உள்ளூர் மயப்பட்ட நிறுவனங்கள் ஆகும். இவற்றை ஏனைய சமூகமட்ட அமைப்புகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கலாம்.

## சனசமூக நிலையம் ஒன்றின் நோக்கம்

சனசமூக நிலையமொன்றின் நோக்கம் சனசமூக நிலையப் பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் தமது ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு வசதிகள் அளித்தல் ஆகும்.

நிருவாகப் பிரதேசத்திலுள்ள கிராம மக்களின் பொருளாதாரம், சமூகம், சமயம், கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் விளையாட்டுத் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தலும் மக்களின் ஓய்வு நேரத்தை நலமுடன் கழிப்பதற்கு ஏற்றமுறையில் திட்டமிட்டுச் செயற்படுதலும் அதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று பயன்படுத்தலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சனசமூக நிலையத்தின் பொருளாதாரப் பணிகள்

தமது கிராமத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றுதற்கான செயற்பாடுகளில் சனசமூக நிலையங்கள் ஈடுபட வேண்டும்.

- கிராமத்தின் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சியும் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கல் (மேசன் வேலை, மரவேலை, தும்புத்தொழில்....)
- விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை முயற்சிகளைத் தூண்டுதலும் அவை பற்றி அறிவூட்டலும்
- குடிசைக் கைத்தொழிலுக்கு வழிகாட்டுதல் (முறுக்கு, மிக்சர் தயாரித்தல், பொதியிடல், சந்தைப்படுத்தல்)
- பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு தொழில் வழிகாட்டலை செய்தலும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதி மூலதனத்தை பெற்றுக் கொடுத்தலும்.
- வறிய குடும்பங்களுக்கு தொழில்முயற்சிக்காக நுண்கடன் வசதிகளை ஏற்படுத்தல்
- அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று மேற்கொள்வதன் மூலம் கிராமத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்.

## சனசமூக நிலையத்தின் கல்விப் பணிகள்

மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துவதனூடாக கிராமத்தின் அறிவுத்திறனை வளர்க்க சனசமூக நிலையங்கள் உதவவேண்டும். மக்களுக்கு நெருக்கமான அமைப்பாக இருப்பதுடன் பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பவற்றினை மக்களிற்கு எளிதில் கிடைக்கச் செய்வதனூடாக மக்களின் வாசிப்புப் பழக்கத்தினை அதிகரித்து மக்களின் அறிவுத்திறனை விருத்தி செய்ய முடியும்.

பின்வரும் செயற்பாடுகளினூடாக சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் உதவ முடியும்.

- வாசிகசாலை நடாத்துதல்
- பாலர் பாடசாலை
- வயோதிபக் கல்வி
- பாடசாலைகளின் பின் மாலை நேரக்கல்வி
- பேச்சுப் போட்டி
- கட்டுரைப் போட்டி
- ஓவியப் போட்டி
- பாட்டுப் போட்டி
- 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதர, க.பொ.த.உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தல்
- கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்
- பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு பாடசாலைக்கு அனுப்புதல்
- பொதுமக்கள் அவசியமான சட்ட திட்டங்களை அறிந்து கொள்ள விழிப்புணர்வூட்டல்.

## சனசமூக நிலையத்தின் சுகாதார, நலப் பணிகள்

- டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை.
- பிரதேச சுத்தம் சம்மந்தமான சிரமதான வேலைகள்.
- இலவச சிகிச்சை முகாம்கள் அமைத்தல்.
- முதலுதவிப் பயிற்சி வழங்கல்.
- மாற்று வலுவுள்ளோர்களுக்கு உதவுதல்.
- கண் தானம் செய்தல்.
- இரத்த தானம் செய்தல்.

## சனசமூக நிலையங்கள் கலை, கலாச்சாரங்களை பாதுகாத்தலும் வளர்த்தலும்

- தமது பிரதேசங்களிலுள்ள கோவில் திருவிழாக்களை நடாத்துதல்,
- தைப்பொங்கல், நவராத்திரி, ஒளி விழா போன்ற நிகழ்வுகளை நடாத்துதல்.
- இலக்கிய விழாக்களை ஒழுங்குபடுத்துதல்
- இயல் இசை நாடகம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்
- பட்டி மன்றம் நடாத்துதல்
- பாரம்பரிய கலை நிகழ்வுகளை நடாத்துதல் (கூத்துக்கள், இசை நாடகங்கள்)
- கிராமியக் கலைஞர்களை கௌரவித்தல்.

## சனசமூக நிலையங்கள் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் அமைப்பு

- சமூகமட்டத்தில் தலைவர்களை உருவாக்கக்கூடிய அடித்தளத்தை சனசமூக நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். தலைமைதாங்கும் பண்பு, பேச்சாற்றல், எழுத்தாற்றல் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக செயற்படல், நடுநிலைமை, எடுத்த பணியை நிறைவேற்றல் என பல்வேறு வகையான தலைமைத்துவப் பண்புகளை வளர்க்க மக்களுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் அமைப்பாக சனசமூக நிலையங்கள் விளங்கவேண்டும்.
- இளைஞர்கள் யுவதிகளின் மன அமைதியின்மைக்கான காரணங்களை இனங்கண்டு அவைதொடர்பான அறிவு பூர்வமான கருத்தரங்குகளை நடாத்தி வழிகாட்டுதல் வேண்டும்.

- நல்லொழுக்கப் பண்புகளை அபிவிருத்தி செய்தல்.

- மதுப்பாவனை, கஞ்சாப் பழக்கம், கொலை, கொள்ளை, பாலியல் துஸ்பிரயோகம் போன்றவற்றால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

- பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலமும் சமூக வேலைத்திட்டங்களில் இளையோரை இணைப்பதன்மூலமும் இளைய சமுதாயத்தை சமூக சிந்தனையுள்ளவர்களாக மாற்றி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க சனசமூக நிலையங்கள் வழிகாட்ட வேண்டும்.

## சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி மன்றத்தின் (பிரதேச சபையின்) அபிவிருத்திச் செயற்பாடுகளில் இணைந்து செயலாற்றுதல்

உள்ளூராட்சி மன்றங்களையும் (பிரதேச சபை) மக்களையும் தொடர்புபடுத்தும் அமைப்புகளாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன. உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சனசமூக நிலையங்கள் பல்வேறு வழிகளில் பங்கு பற்றி சமூக அபிவிருத்திக்கு உதவ முன்வரவேண்டும்.

1. **மக்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் தெரியப்படுத்தல்**

   மக்களின் தேவைகள், குறைகளை அடையாளங்கண்டு உள்ளூராட்சி மன்ற குறைகேள் முறைமையினூடாக உள்ளூராட்சி மன்ற தலைமைத்துவத்திற்கு அறியத்தரவேண்டும். இதனால் மக்களிற்கு மிகவும் அவசியமான தேவைகள் எவை என்பதனையும் எப்பிரச்சினை சமூகத்தில் அடிக்கடி ஏற்படுகிறது எப்பிரதேசத்தில் எவ்வகையான பிரச்சினை காணப்படுகிறது என்பதனை

உள்ளூராட்சி மன்றங்கள் அறிந்து கொள்ள சனசமூக நிலையங்கள் உதவமுடியும்.

## 2. மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க உதவுதல் (LAPDP)

உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து அதனடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றன. இதற்காக மக்களின் தேவைகளை அடையாளங்காணவும் அவற்றை முன்னுரிமைப்படுத்தவும் சனசமூக நிலையங்கள் உதவவேண்டும்.

திட்டங்கள் தயாரிக்கும் போது புவியியல், பிரதேச கலாசாரம் போன்றவற்றிற்கேற்ப திட்டங்கள் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை உள்ளூராட்சி மன்றங்களிற்கு சனசமூக நிலையங்கள் வழங்கவேண்டும்.

## 3. அபிவிருத்திப் பணிகளில் மக்கள் பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல்

உள்ளூராட்சி மன்றங்கள் தமது அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளும் போது மக்கள் பங்குபற்றலுடனேயே மேற்கொள்ள வேண்டும் என்று உள்ளூராட்சி மறு சீரமைப்பு சுற்றறிக்கை 10ல் கூறப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் சமூகத்தின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள சனசமூக நிலையங்கள் உதவவேண்டும்.

கிராமங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வேலைபற்றிய விளக்கங்களை மக்களுக்கு வழங்குவதும் அவர்களை ஒன்றிணைத்து சிரமதானம் மேற்கொள்ளல், சமூக கண்காணிப்பு குழுக்களைத் தெரிவு செய்து வேலைகள் ஒழுங்குமுறையாக நடைபெறுவதை கண்காணித்து அறிக்கையிடல்

என்பவற்றினூடாக உள்ளூராட்சி மன்றங்களிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் வீதி அகலிப்பு, குடிநீர் விநியோகம் போன்ற செயற்பாடுகளில் தாங்களாகவே முன்வந்து ஒத்துழைப்பு வழங்கும் அளவிற்கு மக்களை நெறிப்படுத்தவேண்டியது சனசமூக நிலையங்களது கடமைகளாகும்.

## 4. பாதீடு (வரவு செலவுத் திட்டம்) தயாரிப்பதற்கு உதவுதல்

உள்ளூராட்சி மன்ற பாதீடு தயாரிப்பு நடவடிக்கைகளிலும் நடைமுறைப்படுத்தலிலும் சனசமூக நிலையங்களின் பங்கு மிகவும் அவசியமானதாகும். வரவு செலவுத் திட்டத்தில் தம்மால் முன்வைக்கப்பட்ட அவசிய தேவைகள், பிரச்சினைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? எல்லா கிராமங்களுக்கும் நிதி ஒதுக்கீடு பரவலாக்கப்பட்டுள்ளதா? பிரதேச சபை குறித்த வருடத்தில் என்னென்ன வேலைத் திட்டங்களை ஆற்றவுள்ளது? போன்ற பல விடயங்களையும் அறியவும் நியாயப்படுத்துவதன் மூலம் முன்னுரிமைத் தெரிவுகளில் மாற்றங்களைச் செய்து கொள்ளவும் மக்களுக்கும் பிரதேச சபைக்கும் உள்ள இடைவெளிகளைக் குறைப்பதற்கும் இது உதவும்.

## 5. வரி அறவீடு, மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்

மக்களிடமிருந்து சோலைவரி மற்றும் வரி நிலுவைகளை உள்ளூராட்சி மன்றங்களிற்கு பெற்றுக் கொடுக்க சனசமூக நிலையங்கள் உதவவேண்டும். கட்டட அனுமதி பெறுவதன் அவசியத்தை மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதுடன் அனுமதியற்ற வகையில் கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பில்

உடனடியாக உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரியப்படுத்துவதும் சனசமூக நிலையங்களுக்குள்ள கடமையாகும்.

சனசமூக நிலையங்கள் கிராம மட்ட அமைப்பு என்றவகையில் ஏனைய அமைப்புக்களிலிருந்து வேறுபட்டு பல பணிகளை ஆற்றுவதன் மூலம் கிராமிய உட்கட்டுமானங்களை விருத்திசெய்து அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். எனினும் தற்போதைய சூழலில் இயங்கிவரும் சனசமூக நிலையங்கள் தமது உண்மையான நோக்கத்தையும், ஆற்றவேண்டிய பணிகளையும் அறிந்து சமூகப்பணி ஆற்றுகின்றனவா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தால் தமது வாழ்வாதாரங்களை இழந்த மக்களால் சமூக பணிகளை முழுமையாக ஆற்றுவதில் சவால்கள் இருந்திருப்பினும் இனிவரும் காலங்களில் சனசமூக நிலையங்கள் தமது நோக்கத்திற்கு ஏற்றவாறு பணிகளை ஆற்றி செயற்படுவதுடன் யுத்தத்தால் அழிவடைந்த கிராமங்களை எழுச்சிபெறச் செய்வதற்கு தமக்குள்ள பங்கினையும் புரிந்து செயற்பட வேண்டும்.

## தேசிய வாசிப்பு மாதம், உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் பதிவுகள் - 2015











**தேசிய வாசிப்பு மாத**
**நிகழ்வுகளின்**
**பதிவுகள் 2015**











தேசிய வாசிப்பு மாதம்,
உள்ளூராட்சி வார
நிகழ்வுகளின் பதிவுகள்
2015




## தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் பதிவுகள் - 2015











# இளையோரே கேளீர்


*செல்வி. சண்முகம் லோபிதா,*
*முல்லையடி, பளை.*


நாளை நலம் பெற
ஞாலம் தோள் தூக்கும்
நல்லோரே
கடனுரைப்பேன் கேளீர்!
பரமன் தந்த மானுடம்
அது மிகப் புனிதம்
கண் போற் காத்தல்
பாரில் நம் கடனே

வேண்டாம் நாகரிக மோகம்
இளையோரே நமக்கேன்?
கூச்சமின்றிக் கும்மாளமிட்டு
குதூகலிக்கும் உம் மதியென்ன?

எண்ணுமெழுத்தும் மிகவே
காக்கும் உனக்கு கேவலம்
பெண்ணும் மதுவும்
இன்று எதற்கு?

பொன்னான பொழுதுகள்
வீணாக்கி மண்ணில்
வாழ்வு தொலைக்க
உமக்கு மதியெங்கு போயிற்று

பண்பாடு தொலைந்து
பரிதவித்தீர் பாரிடை நங்கையரே
அநாகரிகச் சாக்கடையில்
நழுவி நீர் விழுந்தீர்

இளமை துள்ளியது
முதுமையை அவமதித்து
அறனும் நல்வாழ்வும்
அறியாப் பொருளாச்சு

இதுவே முடிவென்றால்
மோட்சம் எங்கு எமக்குண்டு?
நீர் நீக்கிப் பாலுண்ணும் பறவை
தீது நீக்கி நாம் சிறப்பது பெருமை

# சமுதாய வளர்ச்சியில் பொது நூலகங்களின் பங்கும் அவற்றினால் வழங்கப்படக்கூடிய சேவைகளும்

*செல்வி. செ. உமாதேவி*

*நூலகர்*

*புலோப்பளைப் பொதுநூலகம்*

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.*

வாசிப்பினை வளப்படுத்துவதற்கு சிறந்த நிலையமாக விளங்குவது நூலகம் ஆகும். நூலகம் என்பது நூல்களைப் பாதுகாத்து வைக்கும் காப்பகம் என்ற கருத்துமாறி "அறிவினைப் பரப்புகின்ற நிறுவனம்" எனும் புதிய கருத்துநிலை உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட நூலகங்கள் இன்று தகவல் தொழில்நுட்பம், கல்விச் செயற்பாடுகள் என விரிந்து பரந்து தனது கிளைகளைப் பரப்பி மக்களுக்கு சேவைகளை ஆற்றிவருகின்றன. இந்நூலகங்களை வாசகர்களின் தன்மைக்கு ஏற்ப பொதுநூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், விசேட நூலகங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் பொதுநூலகங்களை எடுத்துக்கொண்டால் இவை உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்பவற்றின் கீழ் இயங்குகின்றன. "பொதுநூலகங்கள் அறிவைப் பெறுவதற்கான உள்ளூர் நுழைவாயிலாக தனிநபருக்கும், சமுதாயக் குழுக்களுக்கும் வாழ்நாள் முழுவதுக்குமான கல்வியை வழங்குவதுடன் சுதந்திரமாகத் தீர்மானம் செய்வதற்கும், கலாச்சார மற்றும் தகவல் அபிவிருத்திகளைச் செய்வதற்குரிய நிறுவனங்களாகவும், சமுதாயத்தினரின் மனத்தில் ஆன்மீக நலத்தையும், அமைதியையும் பாதுகாக்கும் முகவர்கள் போன்றும் செயற்பட வேண்டும்" என்பதே யுனெஸ்கோவின் பொதுநூலகங்கள் பற்றிய கொள்கை விளக்கமாகும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டிலுள்ள சமூகங்களின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது. அதேபோன்று ஒரு சமூகத்தின் முன்னேற்றமோ சமூகத்தில் வாழுகின்ற மக்கள் ஒவ்வொருவரது முன்னேற்றத்திலும் தங்கியுள்ளது. எனவே சமூக அங்கத்தவர்களுக்கு சேவை செய்கின்ற, ஒரு சமூகத்தின் உயர் வளர்ச்சிக்கு பாடுபடுகின்ற நிறுவனங்களாக பொதுநூலகங்கள் மிளிர்கின்றன. நவீன சமூகத்தில் முக்கிய அம்சமாகக் கருதப்படும் பொதுநூலகங்கள் சமூகத்தின் நாளாந்த செயற்பாடுகளில் மிக முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு சமூக நிறுவனமாகும். சமூகங்களின் கலாச்சார நிலையங்களாக சேவையாற்றும் இந்நிறுவனங்கள் சமூக அங்கத்தவர்களை இன, மத, வயது வேறுபாடின்றி ஒருங்கிணைக்கும் நிலையங்களாகவும் காணப்படுகின்றன. சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் முக்கிய பங்கு வகிக்கும் இந்நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்குவதனூடாக சமூகத்தின் உந்துசக்தியாக வளர்ந்துள்ள அதேநேரம் ஜனநாயகம், பாதுகாப்பு, அரசியல் விழிப்புணர்வு, சமூக அறிவு போன்றவற்றிற்கு உதவுகின்ற ஒரு சமூக நிறுவனம் என்பதனையும் நாம் உணர்ந்துகொள்வது அவசியமாகும்.

இப் பொதுநூலகங்கள் வாசகரின் நன்மை கருதி தமது வசதிக்கேற்ப வாசிப்புப் பகுதி, இரவல் வழங்கும் பகுதி, உசாத்துணைப் பகுதி, சிறுவர் பகுதி, பருவ இதழ் பகுதி, கட்புல செவிப்புல சாதனப் பகுதி என பல பகுதிகளை ஏற்படுத்தி மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன. இங்கு சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான நூல்களும் காணப்படும். மாணவர்களுக்கான கல்வி சம்பந்தமான நூல்கள், கடந்தகால வினாவிடைகள், இளைஞர் யுவதிகளுக்கான சிறுகதைகள், நாவல்கள், இலக்கிய நூல்கள், பெண்களுக்கான சமையற்கலை, குழந்தை வளர்ப்பு, அழகுக்கலை, முதியோருக்கான சிந்தனைக் கதைகள் மற்றும் அறிவுசார் விடயங்களைக் கொண்ட நூல்கள் என்பவற்றுடன் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த கோவில்கள், புனித ஸ்தலங்கள் பற்றிய வரலாறு, வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களின் சேகரிப்புக்கள், பெரியோர்களின் வரலாற்றுக்

குறிப்புக்கள் போன்ற பல்வேறு வகையான நூல்களையும் பொதுநூலகங்கள் கொள்வனவு செய்து எல்லாவகையான மக்களையும் திருப்திப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. அதுமட்டுமன்றி இணையத்தளங்களின் மூலம் உலகின் நடப்பு விடயங்களை அறிந்து அவற்றை உடனுக்குடன் வாசகருக்கு வழங்கியும், அவ்வப்போது வெளிவருகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்து தற்காலத் தகவல்களை அறிந்து கொள்ளவும் துணை புரிகின்றன.

விசேடமாக சிறுவர் பகுதியில் சிறுவர் நூல்கள், சிறுவர் சஞ்சிகைகள், புகைப்படங்கள், ஓவியங்கள் போன்றன வைக்கப்பட்டிருக்கும். அத்துடன் அவற்றின் சுவர்களில் சிறுவர்களின் சிந்தனைத் திறனை தூண்டக்கூடிய வர்ணங்களும் தீட்டப்பட்டிருக்கும்.

மேலும் இப் பொதுநூலகமானது ஓலைச் சுவடிகள், வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் பண்டையகால கலை, கலாச்சாரப் பண்பாடு, வரலாறு என்பவற்றைப் பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் தேவைக்கு வழங்கி சமுதாய வளர்ச்சிக்குப் பங்காற்றுகின்றன.

## பொதுநூலகங்களினால் வழங்கப்படக்கூடிய சேவைகள்

### 1) இரவல் வழங்கும் சேவை:

வாசகரானவர் நூல்களை நூலகத்திற்கு வெளியே அதாவது வீட்டுக்கு எடுத்துச்சென்று வாசிக்கும் பொருட்டு அவற்றை இரவலாக வழங்குகின்ற செயற்பாடே இரவல் வழங்கும் சேவை ஆகும். இச்சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற வாசகர் முதலில் தம்மை நூலக அங்கத்தவராகப் பதிவுசெய்தல் வேண்டும்.

## 2) உசாத்துணைச் சேவை:

இது நூலகங்களினால் வழங்கப்படும் சேவைகளில் மிக முக்கியமானதும் சிறந்த சேவையாகவும் விளங்குகின்றது. இது பின்வரும் வழிகளில் மேற்கொள்ளப்படலாம்.

➢ **வாசகரை நூலகத்துக்கு அறிமுகம் செய்தல்:**

நூலகத்திற்கு புதிதாக வரும் வாசகர்களுக்கு நூலக விதிமுறைகள், சேவைகள், அங்கத்தவராகச் சேர்வதற்கான ஒழுங்குமுறைகள், நூல்களின் தன்மை, நூல்கள் வைக்கப்பட்டிருக்கும் பிரிவுகள் போன்ற எல்லா விபரங்களையும் தெரியப்படுத்துதலே இச்சேவையின் நோக்கமாகும்.

➢ **வாசகருக்கு வழிகாட்டுதல் / வாசகர் அறிவுறுத்தல் சேவை:**

நூலகத்திற்கு வருகின்ற வாசகரின் தன்மையை அறிந்து அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதே வாசகர் அறிவுறுத்தல் சேவை ஆகும். ஒரு பொதுசன நூலகத்திற்கு அனைத்து மட்டங்களைச் சேர்ந்த வாசகரும் வருவதனால் இச் சேவை மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

➢ **வாசகரையும் நூலையும் பொருத்தமான முறையில் இணைத்து விடுதல்:**

பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முறையில் வாசகனையும் நூலையும் இணைத்து விடுகின்ற ஒரு செயற்பாடு ஆகும்.

## 3) நூலக விரிவாக்க சேவைகள்:

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் நூலகத்தின்பால் ஈர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே நூலக

விரிவாக்க சேவைகள் ஆகும். முக்கியமான சில விரிவாக்க சேவைகள் வருமாறு:

- **வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல்:**
பொதுவான பொருட்துறைகளில் ஆர்வமுள்ளோரை ஒன்றுசேர்த்து வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல் வேண்டும். இவை வாராந்தம் / மாதாந்தம் என்ற ரீதியில் நடாத்தப்படலாம். இது நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே அவற்றுடன் தொடர்புடைய நூல்களைக் காட்சிப்படுத்தினால் வாசகர்களுக்கு இலகுவாக இருக்கும்.

- **கல்வியறிவற்றோருக்கான வாசிப்பு:**
கல்வியறிவற்றோரையும் சமூகத்தின் மேல்நிலைக்குக் கொண்டுவரவேண்டிய பணி பொதுநூலகங்களையே சார்ந்தது. எனவே இவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி கல்வி, தகவல் என்பவற்றைப் பெறுவதற்கு தூண்டுதல் வேண்டும். இவ்வாறாக அவர்கள் கல்வியறிவுள்ளவர்களாக மாறிய பின்னர் மேலும் அவர்களை ஊக்குவிக்க வழிகாட்டலாம். இதனையே கல்வியறிவற்றோருக்கான வாசிப்பு என குறிப்பிடப்படுகின்றது.

- **நூல் கண்காட்சிகள் நடாத்துதல்:**
நூலகத்தில் இருக்கின்ற எல்லா வகையான ஆவணங்களையும் அதாவது நூல்கள், பருவ இதழ்கள், வரைபடங்கள், நுண்வடிவங்கள், கட்புல செவிப்புல ஆவணங்கள் போன்ற எல்லாவற்றையும் கண்காட்சியில் வைப்பதன் மூலம் மக்கள் மத்தியில் நூலகம் கொண்டுள்ள தகவல் வளங்கள் பற்றிய அறிவு மேம்படுத்தப்படுகின்றது. எனவே இங்கு நூலகம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வாசகர்களை நூலகத்திற்கு வரவழைக்க முடியும்.

➢ **ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு வைத்தல்:**

ஒரு சமூகத்தின் வளர்ச்சியானது அதன் மேல்மட்ட அங்கத்தவர்களின் ஆதரவிலும் தங்கியுள்ளமையினால் அவர்களுடன் நல்லுறவினை வளர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். எனவே உள்ளூரிலுள்ள கல்வி நிலையங்களால் நடாத்தப்படும் கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்குப் பொருத்தமான இடத்தினை வழங்குவதன் மூலமும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் அவர்களுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதும் ஒரு பொதுநூலகத்தின் கடமையாகக் காணப்படுகின்றது.

➢ **கலாச்சார நிகழ்வுகள் நடாத்துதல்:**

சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் நூலகத்தின்பால் ஈர்க்கக்கூடிய நிகழ்வுகளான திரைக்காட்சி, நாடகம் போன்றவற்றை நூலகத்தில் நடாத்துவதனூடாக நூலகப் பக்கமே வராதவர்களை நூலகத்திற்கு வரச்செய்கின்ற செயற்பாடுகளில் ஒன்றாகவும் இது விளங்குகின்றது.

➢ **சிறுவர்களுக்கான "கதை சொல்லும் நேரம்" நிகழ்வை ஒழுங்கமைத்தல்:**

சிறுவர்களை சுயகற்றலிற்கு வழிகாட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் சுயசிந்தனையுள்ள சந்ததியினரை உருவாக்க முடியும். எனவேதான் பொதுநூலகங்களில் சிறுவர் பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இங்கு கதைகூறல் நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் வாசிக்கும் ஆற்றலும் மேம்படுத்தப்படுகின்றது.

- **நூலக விளம்பரம்:**

மக்கள் மத்தியில் நூலகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், மக்களுக்கும் நூலகங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை உருவாக்கும் நோக்குடனும் தேசிய வாசிப்பு மாதம், நூலக வாரம் கொண்டாடுதல், நூலகக் கண்காட்சிகள் நடாத்துதல், புதிய நூல்களைக் காட்சிப்படுத்துதல், நூலகத்தின் பணிகள், செயற்பாடுகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை வாசகருக்கு விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை நூலகங்கள் முன்னெடுக்க முடியும்.

- **சொற்பொழிவுகள் நடாத்துதல்:**

சமூகத்திலுள்ள கல்விமான்களை இதில் ஈடுபடுத்தி சொற்பொழிவுகளை நடாத்தலாம். இச்சொற்பொழிவுக்கான தலைப்பானது தற்காலத்திற்கு ஏற்றவாறு இருத்தல் அவசியம். இந்நிகழ்வின்போது குறித்த சொற்பொழிவுடன் தொடர்புடைய நூல் விபரங்களும், அவற்றில் எந்தெந்த நூல்கள் தற்போது நூலகத்தில் இருக்கின்றன என்ற விடயமும் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அந்நூல்களை மண்டபத்தின் ஒருபுறத்தில் காட்சிப்படுத்துதல் பயனுடையதாகும்.

- **நடமாடும் நூலக சேவை:**

நூலகத்திற்கு வரமுடியாத வாசகர்களை நாடி நூல்களை எடுத்துச்சென்று வழங்கி அவர்கள் தமது அறிவுத் தேடலைப் பூர்த்திசெய்ய உதவுகின்ற ஒரு சேவையாகவே இது விளங்குகின்றது. இச்சேவையினால் கிராமப்புற மக்கள் மட்டுமன்றி முதியோர் இல்லங்கள், அநாதை இல்லங்கள், வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள் போன்றவற்றிலுள்ள மக்களும் மிகவும் பயனடைகின்றனர்.

➤ விசேட சேவைகள்:

*i) மொழிபெயர்ப்புச் சேவை செய்தல்:*

பாரபட்சமற்ற முறையில் அறிவினைப் பரப்புதல் என்பது பொதுநூலகங்களின் முக்கிய பணியாகும். இதற்கு மொழியும் ஒரு தடையாக உள்ளது. எனவே பொதுவான நடப்பு விடயங்களையாவது மொழிபெயர்ப்புச் செய்து காட்சிப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு உதவ முடியும்.

*ii) பத்திரிகைத் துணுக்குகளை வெட்டி ஒட்டுதல்:*

பத்திரிகைகளில் வெளிவருகின்ற முக்கியத்துவமிக்க கட்டுரைகள், செய்திகள், அண்மைக்கால வெளியீடுகள் போன்ற பல்வேறு செய்திகளையும் வெட்டியெடுத்து அவற்றை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வைத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் போன்ற உயர் மட்டங்களில் உள்ளோரையும் நூலகத்திற்கு வரவழைக்க முடியும்.

எனவே தொகுத்து நோக்கும்போது, பொதுநூலகமானது சமூகத்தில் வாழுகின்ற பாமரமக்கள், கல்வி கற்றோர், சிறுவர்கள், முதியோர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரதும் அறிவுப் பசியைப் போக்கும் நோக்கில் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கி சமுதாய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருவதனை யாராலும் மறுக்க முடியாது. இந்திய நூலக அறிஞர் வே.தில்லைநாயகம் அவர்கள் சமூகத்தில் நூலகத்தின் முக்கியத்துவத்தை பின்வருமாறு கவிதை வரிகளில் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*"செந்தமிழ் இன்பம் செறிந்திட நூல்கள் சேர்ப்பதும் நூலகமே*
*தமிழ் சந்தம் விளங்கிட சாத்திர நூல்கள் தருவதும் நூலகமே*
*அதில் சிந்தையின் உணர்வுகள் அறிவியலாக செழிப்பதும் நூலகமே*
*இதை எந்தையர் நாட்டின் அறிவகம் என்றே இயம்பியே வணங்கேனோ"*

*என்று கூறியுள்ளார்.*

✲★✲★✲★✲★✲

# யாருக்கு முதல் மரியாதை?

*திரு. க. சிறிஸ்கந்தராஜா,*
*பெரிய பளை, பளை.*

ஒரு கையில் இருக்கும் ஐந்து விரல்களுக்கு இடையிலேயே எத்தனை வேற்றுமைகள். ஐந்து விரல்களுக்கிடையில் ஒரு நாள் கடுமையான வாக்குவாதம். அவர்களுக்குள் யார் பெரியவன்? யாருக்கு முதல் மரியாதை? என்பதைப் பற்றி விவாதம்!

கட்டைவிரல் சொன்னது நீங்கள் நாலுபேரும் ஒரு பக்கம். உங்களுக்கு ஈடுகொடுத்துப் பொருளைத்தூக்க நான் மட்டும் மறுபக்கம் நான் எவ்வளவு பெரியவன்!

அடுத்த விரல் சொன்னது யாரையாவது சுட்டிக்காட்ட என்னை விட்டால் யார் இருக்கிறார்கள்? நான் தான் மனிதர்களையே அடையாளம் காட்டுபவன்.

நடுவிரல் ஏளனமாகச் சிரித்தது. நிமிர்ந்து நின்று பாருங்கள் யார் உயர்ந்தவன்? யார் பெரியவன்? நான்தானே. இது கூட புரியவில்லையா?

மோதிரவிரல் தன் புகழைப் பாடியது. மனிதர்கள் என்னைத்தான் பொன்னால் அலங்கரிக்கிறார்கள். அவர்கள் பொன்தந்து யாரை மதிக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரியவில்லையா?


கடைசியிலிருந்த சின்னிவிரலுக்கு அழுகை வந்தது. அதற்கென்று ஒரு பெருமையும் இல்லையா? கடவுளிடமே போய் நின்றது. மனம் நொந்து தனது கோரிக்கையை முன்வைத்தது.

கடவுள் பதில் சொன்னார் மனிதர்கள் கைகுவித்து என்னை வணங்கும் போது எனக்கு அருகில் முதலில் நிற்பது யார்? நீ தான் எனக்கு நெருக்கமான விரல் அல்லவா?

எல்லா உயிர்களுமே மதிப்புக்குரியவை. ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பு உண்டு. நாம் நோக்கும் நிலையில் தான் வேறுபாடு.

## பச்சிலை இதழ் 1 வெளியீட்டின் பதிவுகள்











# பூவுலகம் போற்றும் பேறுகள் தருவாள்

*திருமதி. இந்துமதி சிறிஸ்கந்தராஜா,*
பெரியபளை, பளை.

இரட்டைக் கேணி ஆலயம் சென்று
இரந்து தாயவள் இணையடி தொழுதால்,
எல்லோர் வினையும் அவள் அருளாலே
எளிதாய் இலாது விலகிப் போகும்.
வல்லவன் கடைக்கண் பார்வை அதற்கு
வல்லமை உண்டு வாழ்வை உயர்த்திட,
பொல்லாப் பெல்லாம் விலகிப் போகும்
புத்தொளி பரப்பும் தாயவள் ஒளிக்கதிர்.

நின்றும் நடந்தும் இருந்தும் தாயவள்
நித்திய நைமித்திய பூசைகள் கண்டால்,
என்றும் இன்றும் என்றும் அம்பிகையின்
அன்பும் அருளும் நிறைவாய் கிட்டும்.
ஓரடி எடுத்து ஆலயம் நோக்கி
ஓம் சக்தியே என உருகி நடந்தால்,
நேரடியாக நிறையருள் தரவென
நேரியவள் பலஅடி எம்முன் வருவாள்.

உலா வரும் அம்மன் பிள்ளையார் முருகன்
உடன் வரும் காட்சியை உளமதில் பதித்தால்,
நிலாவர இருள் அகல்வது போல
நிற்கா ஆணவத் திமிரது நீங்கும்.
சீலமாய் நடந்து திருவிழா கண்டால்,
சீரும் சிறப்பும் சேமமாய் சேரும்.
மூலஉன் அம்மன் முழுமையில் திழைத்தால்,
முற்றிய ஞானம் உற்பவ மாகும்.

விழுந்து வணங்கி வினயமாய் கேட்டால்
விரும்பும் பேறுகள் விரைவாய் கிட்டும்
ஓதிப் பண்ணொடு பாடல் இசைத்தால்
உள்ளொளி பரப்பி உவகை சேர்க்கும்.
நேரில் கண்களில் காட்சியை நிறைத்து
நிம்மதியோடு நின்று வணங்கினால்
பூரிப்போடு அருள் மழை பொழிந்து
பூவுலகம் போற்றும் பேறுகள் தருவாள்.

# வாசிப்பை நேசிப்போம்

***திரு.வ.ஜீவரத்தினம்,*** B.ED, SLPS.
அதிபர்- பளை றோ.த.க. பாடசாலை

மொழியில் வாசிப்பும் ஒரு முக்கிய இடத்தினை வகிக்கின்றது. மொழியின் ஆரம்பம் சைகையாகும். பின்னர் எழுத்துருவம் பெற்ற காலகட்டத்திலிருந்து வாசிப்பு முக்கியத்துவம் பெறலாயின. எமது நாட்டு பாடசாலையின் கலைத்திட்டத்தில் 1997ஆம் ஆண்டிற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் தேசிய குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக சில அடிப்படையான தேர்ச்சிகளை மையப்படுத்தியவாறு பாடசாலைக் கலைத்திட்டத்தில் மொழித்திறன்களை அதிகரிப்பதற்குரிய வழிவகைகள் பல வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதன்படி பார்க்கின்ற போது முதலாவதாக தொடர்பாடல் தேர்ச்சிகள் மூலமாக எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்ப தகைமை ஆகிய நான்கு வகை துணைத் தொகுதிகளாக வகுக்கப்பட்டு அதில் வருகின்ற கவனமாக செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரக்கூடியவாறு கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றை இத்தொடர்பாடல் தேர்ச்சியின் ஊடாக முக்கியத்துவம் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம். எனவே தான் கல்வித்துறையில் குறிப்பாக ஆரம்பக்கல்வி புலத்தில் வாசிப்பதன் முக்கியத்துவத்தினை உணர்த்தும் முகமாக மௌனமாக வாசித்தல், உரத்து வாசித்தல் என்கின்ற சொற்கள் கற்றல் - கற்பித்தல் மொழிப்பாடத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதையும் காணலாம்.

மேலும் எழுத்துக்களைக் காணும் நிலையே வாசித்தலின் ஆரம்பமாகும். கண்ணால் காணுவதை மூளையானது அறிந்து

பொருளுணரும்போது வாசித்தல் அங்கே நிகழ்கின்றது. இங்கு இரு உளவியல் செயல்களை மூளை கண்ணுக்குச் சொல்லுதல், கண் மூளைக்குச் சொல்லுதல் என்பன நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது வரி வடிவத்திலுள்ள சொற்களை ஒலிவடிவமாக மாற்றி உச்சரித்தல், உறுப்புக்களும் சொற்களை நோக்குகின்ற கண்ணும் ஒத்துழைக்கின்ற போது அங்கே வாசித்தல் நடைபெறுகின்றது. எனவே இவைகள் நடைபெறுவதற்கு உள்ளம், கண், காது, மூக்கு, நா, குரல் ஆகிய உறுப்புக்கள் அனைத்தும் ஒத்துழைக்கின்ற போது தான் அங்கே வாசிப்பு என்னும் திறன் ஆரம்பமாகின்றது. எழுத்துக் குறியீடுகள் ஒலிக்குறியீடுகளாக மாற்றப்படுகின்றன. என்ன தான் வாசிப்பு நாவிலிருந்து வெளியாகினாலும் பொருளுணர்தலோடு இணைந்த வாசிப்பே வாசித்தலாகும். எழுத்துக்களால் சொற்கள், சொற்களாலான வாக்கியங்கள் மொழிக்கூற்றுகளாகின்றன. இவ்வாறு முக்கியத்துவம் பெற்றுள்ள வாசிப்பானது ஒரு பிள்ளையின் ஆரம்ப சிறுபராயத்திலிருந்து உருவாக வேண்டும்.

இன்றைய நவீன உலகில் வாசிப்புத்திறனானது அருகி வருகின்றது. இதன் காரணமாக பொது அறிவுத்திறனானது மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. எனினும் இந்நிலையானது பிள்ளையின் வாசிப்புத்திறனில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் காட்டுகின்றன என்கின்ற குற்றச்சாட்டு கல்வியியலாளர்களிடையே உண்டு. ஏனெனில் இன்றைய நவீன யுகத்தில் தொடர்பாடலின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றமை முக்கிய காரணமாக கொள்ளப்படுகின்றது. கணனித் தொடர்புகள், தொலைக்காட்சி நிகழ்வுகள், வானொலி போன்ற ஊடகங்களின் செயற்பாடுகள் இன்று நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிப்பதிலிருந்து தவிர்த்து வருவதுடன் அவை வாசிப்புக்கு போட்டியாக வலம் வருகின்ற ஊக்கிகளாகவும் காணப்படுகின்றன.

இந்நிலையினைக் கருத்தில் கொண்டு வருடந்தோறும் வாசிப்பு மீதான பற்றினை அனைவர் மத்தியிலும்

ஏற்படுத்துவதற்காக ஒக்டோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாக கருதப்பட்டு மாணவரிடையே வாசிப்பில் ஆசை, ஆர்வத்தை ஏற்படுத்த முனைகின்ற ஒரு போக்கும் காணப்படுகின்றது. பாடசாலைகள் தோறும் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதற்காக வேண்டியே பாடசாலைகளில் வாசிப்பினை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகள் தோறும் நூல்நிலையங்கள் திறக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு அரசு பல இலட்சங்கள் ஒதுக்கி நூல்களையும் நூலகர்களையும் வழங்கியது. ஆனால் இத்திட்டம் பெயரளவில்தான் இயங்குகின்றன என்பதை பல பாடசாலைகளின் நூலகங்களைப் பார்க்கின்ற போது எண்ணத்தோன்றுகின்றது.

சில பாடசாலைகளில் நூல்கள் புழுதிபடாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. கிழிந்து போய்விடும் என்பது ஒரு பிழை. நூலகத்திற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேறு பாடங்கள் கற்பிப்பது, மாணவர்கள் நூல்கள் கேட்டால் இல்லை என்று கூறுவது, நூலகப் பாடவேளைகளில் வேறு வேலைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவது, அதிபர்கள் இவற்றிற்கு முக்கியத்துவம் வழங்காமை போன்ற பல்வேறு தடைகள் மாணவர்களின் வாசிப்பு மீதான செல்வாக்கை உடைத்தெறிந்து விடுவதால் வாசிப்பின் ஊடாக காணப்படும் மொழியின் மீதான பற்றை குறைக்கும் செயலாகவும் இவைகள் காணப்படுகின்றன.

எந்தவொரு பாடத்தையும் வகுப்பறையில் கற்பதற்கு வழிவகுப்பது மொழிப் பாடமாகும். மொழியில் கருத்தூன்றி வாசித்தல் மிகவும் முக்கியமாகும். மொழிப்பாடம் விளங்காத போது ஏனைய பாடங்களைக் கற்பதும் கஷ்டமான காரியமாகிவிடும். பாடசாலையில் தரம் ஒன்றில் இணைகின்ற ஒரு சிறு பிள்ளை வீட்டில் பேசிய மொழியையே பேசும். அங்கே பல குறைகள் தென்படும். அதனை நிவர்த்திக்கும் வகையில் மொழியின் அழகினை ஒருங்கே மாணவர்களிடம் பேசிக்காட்ட வேண்டும். தெருவில், வீட்டில், உறவினரோடு பேசுகின்ற

மொழியானது பேச்சு மொழியாகும். வாசிக்கின்ற போது இம்மொழி திருத்தமாகக் காணப்படும். இதனை எழுத்து மொழி என்று கூறுவர். இதனையே பாலிம்பிள் (1960) பின்வருமாறு கூறுகின்றார். இலக்கணப்பிழையின்றி பேசுபவர்களாயின் அவர்களது பேச்சை பிள்ளைகளும் பின்பற்றி இலக்கணப் பிழையின்றி பேசப்பழகுவார்கள். நல்ல இலக்கியங்களையும் நல்ல புத்தகங்களையும் படிக்கச் செய்வதால் திருத்தப் பேச்சு உணர்ச்சியை இளமையில் இருந்தே உண்டாக்கலாம். அதனால் பிழையற்ற பேச்சுக்கள் பின்னர் காதில் விழும் போது இயற்கையாகவே அருவருப்புத் தோன்றும் எனக் கூறுகின்றார். எனவே தான் பேச்சு மொழியிலிருந்து பேச்சு மொழிக்கு மாணவர்களை அழைத்துச் செல்கின்ற ஒரு செயற்பாடு ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டும். இன்று பாடசாலைகளில் மொழிப்பாடத்தில் பின்னடைவுக்கு உள்ளாகின்ற மாணவர்கள் பலர் உள்ளனர் இவர்களை ஏனைய பாட ஆசிரியர்களும் வாசிக்கத் தெரியாதவர்களின் பட்டியலில் இட்டுச்செல்வதால் அம்மாணவர்கள் அவமானப்பட்டு இறுதியில் கல்விக்கு வேட்டுவைக்கின்ற நிலைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

ஆதலால்தான் ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புக்களில் இருந்தே மாணவன் மொழிப்பாடத்தினை நன்கு விளங்கக் கூடியவாறு கற்பித்தல் வேண்டும். ஆசிரியர் பாடத்திற்கான விடயக்கூறுகளை தெளிவாக புரிந்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது பொருத்தமானவாறு ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியமாகும். மொழி ரீதியாக ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சிகளில் பின்வரும் விடயங்கள் வாசிப்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக கருதப்படுகின்றது.

அதாவது கவிதை, பாடல், கதை கேட்டல், வாசித்தறிதல், பிழையின்றி உச்சரித்து உரத்து வாசித்தல், செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து சம்பந்தமான நற்பழக்கவழக்கங்கள்

பற்றிய எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல், வாசித்த பின் கிரகித்ததை வெளிப்படுத்துதல், சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல், இரசனையுடன் வாசித்தல் இவ்வாறான தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்பு மாணவர்களின் நலன் கருதி இவ்வகையான தேர்ச்சிகள் வாசிப்பினை முன்னிலைப்படுத்துவதற்காக ஆசிரியர்களால் முன் கொண்டு செல்ல வேண்டுமென கல்விப்புலத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது நாட்டில் தமிழ் மொழியானது நீண்டகாலமாகவே பாலர் முதல் பல்கலைக்கழகம் வரை போதிக்கப்பட்டு வருவதுடன் சகல பாடங்களும் தாய் மொழியிலேயே தான் கற்பிக்கப்பட்டும் வருகின்றன. இருப்பினும் மொழிப்பாடத்தில் ஒரு தொகை மாணவர்கள் பரீட்சைகளின் போது வெளிப்படுத்துகின்ற வெளிப்பாடானது பூச்சிய மட்டத்தில் காணப்படுவதானது கவலை அளிப்பனவாக உள்ளது. காரணங்கள் பலவாறு கூறப்பட்டாலும் ஆரம்ப வகுப்புக்களின் போது கற்பித்தல் முறையிலுள்ள குறைபாடுகளும் நவீனத்துவமிக்கதான தொழில் நுட்ப ரீதியிலான கற்றல் - கற்பித்தலை விடுத்து காலத்திற்குதவாத பாரம்பரிய கற்றலை மேற்கொள்வதன் பயனாக வாசிப்பு, எழுத்து போன்ற திறன்களில் இருள் சூழ்ந்த தன்மையே இன்றும் தொடர்வதாக மொழி ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே வாசிப்பில் கூடுதலான பலாபலனை பெறவேண்டுமானால் பின்வரும் நடவடிக்கைகளிலும் ஆர்வம் செலுத்துதல் அவசியமாகும். கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கு கதை கூறல், பாடுதல், நடித்தல், பாவனை செய்தல், செய்து காட்டுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கங்கள் கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதான செயற்பாடுகளிலும், விளையாட்டுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மொழித்திறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் உதவலாம். இங்கு கற்றலின் ஊடாக மொழி பயன்படுகின்றது. எனவே வாசிப்பு என்பது எழுத்தில் உள்ளவற்றை கண்களால் பார்த்து வாயால் உச்சரித்து பொருளை உணர்த்துவது என்பதாகும். வாசித்தல் மூலமாக

சொற்களைக் காணுதல், உச்சரித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று கூறுகள் உள்ளடங்குவதுடன் வாசித்தல் மாணவர்களிடையே பல்வேறு திறன்களையும் விருத்தி செய்ய உதவுகிறது எனலாம்.

பாடசாலைகளில் நடைபெறும் பல்வேறு புறகீர்த்தி நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வாசிப்புத் திறனை அதிகரிக்கச் செய்யலாம். அதாவது காலை ஆராதனையின் போது நற்சிந்தனைகள் வாசித்தல், செய்திகள் வாசித்தல், மாணவர் மன்றங்களில் மாணவர்களை பேசவும், வாசிக்கவும் ஊக்குவித்தல். இவ்வாறு அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்குகின்ற போது இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல பேச்சாளர்களாகவும், அறிவிப்பாளர்களாகவும், சமுதாயத்தை வழிநடத்துகின்ற மொழி வல்லமை உடையவர்களாகவும் அமைவதற்கான அடித்தளமாகவே இவ்வாசிப்புத்துறை ஒரு உந்து சக்தியாக அமைந்து விடுகிறது என்றால் அது மிகையாகாது. அத்துடன் வருடந்தோறும் நடைபெறுகின்ற மொழித்திறன் விழாக்களை பாடசாலைகள் மட்டத்தில் அனைத்து மாணவர்களும் பங்குபற்றக் கூடியவாறாக நிகழ்வுகளை ஒழுங்கு செய்து மொழியின் முக்கியத்தை அடைவதற்காக இவைகள் பாலமாக அமைகின்றன. இதற்கு வீடும் வீட்டுச் சூழலும் உதவி நல்குதல் வேண்டும்.

## வாசிப்பில் நூலகங்களின் பங்களிப்பு

கால்.ஃ.போர் என்னும் அறிஞர் நல்ல நண்பர்களை தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு அடுத்து நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல புத்தகங்களைத் தான் எனக் கூறுகின்றார். இதன் மூலம் நான் உணர்ந்து கொள்வது நூல்களின் மகத்துவத்தையாகும். சிறந்த நூல்கள் சிறப்பான கல்வியை வழங்குவதற்கு உதவுகின்றன. இது எதன் மூலம் சாத்தியப்படுகின்றது என்றால் வாசிப்பு மூலமேயாகும். நூலகங்கள் என் பேரில் பட்டி தொட்டியெங்கும் பிரதேச சபைகளின் செல்வாக்குடன் அமைக்கப்படுகின்றன.

ஆனால் வாசிப்பதற்கு ஓரிருவரைத்தவிர வாசிப்பதற்கு மக்கள் வருவதும் குறைவாகவே காணப்படுகின்ற நிலையில் இந்த வாசிப்பு மாதத்திலாவது வாசிப்பின் பயன்பாட்டினை இந்த நூலகங்கள் அப்பிரதேசம் முழுவதும் அங்கு வாழ் மக்களை ஊக்குவித்தல் வேண்டும். வீட்டுக்கொரு பத்திரிகை வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. எத்தனை வீதமான ஆசிரியர்கள், அதிபர்கள் பத்திரிகை ஒன்றையாவது வாசிக்கின்றார்கள்? என்றால் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே காணப்படுவர்.

பொதுவாக வாசிப்பவர்கள் வாசிக்கும் வாசகர்கள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றமை கவலைதரும் விடயமாகும். எனவே தான் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பதன் ஊடாக நாட்டு நடப்புக்களையும், உலக விவகாரங்களையும் அறிந்து கொள்ளவும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் அவசியமாகும்.

## யாழ்ப்பாண நூலக எரிப்பு

அன்று யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட போது தமிழ் மக்களின் உள்ளங்கள் மட்டுமன்றி மனிதாபிமானமுள்ள மனிதர்களின் உள்ளங்களும் வெந்து நொந்து போனது. காரணம் அந்த நூலகத்தின் பயன்பாட்டினை உலகமே அறிந்து வைத்திருந்தது. அந்தளவுக்கு நூலகங்களைப் பயன்படுத்தி அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு நூலகங்கள் பயன்படுத்தப்பட்ட காலம் மீண்டும் நமது பிரதேசங்கள் முழுவதும் உருவாக்கப்படுதல் அவசியமாகும். இன்றைய நவீன நூலகமானது மின்னியல் நிறைந்ததாக காணப்படுகின்றது. ஏனெனில் முழு உலகமும் உள்ளங்கையில் கொண்டுவரப்பட்டுள்ளது. இது எம் மத்தியிலும் உருவாக வேண்டும். நூலகங்கள் காலங்களுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு நவீன ஆய்வு கூடமாக மிளிர வேண்டும். அப்போது தான் வாசிப்பு மற்றும் அறிவுத்திறன்கள் விருத்தி செய்யப்படுவதற்கும் இது போன்ற நூலகங்களின் பங்களிப்புக்கள் முக்கியத்துவம் மிக்கதாகின்றன.

சில நூலகங்கள் இருக்கின்ற இடங்களைப் பார்த்தால் வாசிப்பதற்கே அருவருப்பாக இருக்கும். நூலகங்களின் சுற்றாடல் அமைதி நிறைந்த இடமாக காணப்படுதல் முக்கியமானதாகும். ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது ஒரு நூலகம் திறக்கப்படுகின்ற போது என்கின்ற தத்துவங்கள் நூலகத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றி நிற்கின்றன. நூலகங்களில் பலதரப்பட்ட நூல்கள் காணப்படும். ஆரம்ப வகுப்புப் பிள்ளை தொடக்கம் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் வரை அங்கு நிறையவே நூல்கள் காணப்படும். அதனை பயன்படுத்துவதற்கு சிறுபராயத்திலிருந்து நூலகங்களுடனான உறவை பேணிப் பாதுகாப்பது சிறந்தது. பல்கலைக் கழகங்கள், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் மட்டுமன்றி தொழில் செய்கின்ற எந்தவொரு இடத்திலும் நூலகங்கள் காணப்படுகின்றன. இவை அந்தந்த மக்களின் அறிவுத்தாகத்தை கற்றுக் கொள்வதற்கான ஒரு பொழுது போக்காகவும் நூலகங்கள் துணைபுரிகின்றன. ஆகவே வாசிப்பு மாதத்திலாவது வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டு போட்டி நிகழ்வுகள் மற்றும் கலை கலாச்சார நிகழ்வுகளை நூலகங்கள் தோறும் தோற்றுவித்து அனைவரும் வாசிப்பதற்கு தூண்டும் விதத்தில் உதவி விடுவதுடன் நூல்கள் வாசிப்பதன் மூலம் அறிவினைப் பெறுவது மாத்திரமின்றி நூல்களை நேசிக்கும் சிந்தனையாளனாக சிறுபராயத்தில் இருந்து ஊக்குவிக்கும் கருவியாகவும் தூக்கமின்றி தவிப்பவர்கள் நூல்களை வாசிக்கின்றபோது தூங்கிவிடுகின்றனர். ஒரு தூக்க மாத்திரையாகவும், மன ஆறுதலை தேடுகின்றவர்களுக்கு வாசிப்பு நூல்கள் பயன்படுகின்றன.

வாசிப்பு என்பது அன்றாட வாழ்க்கையில் இயல்பானதொரு செயற்பாடாக இருக்க வேண்டும் அன்றாடம் குளிப்பது, சாப்பிடுவது மாதிரி. ஆனால் நம் சமூகம் இப்படி நினைப்பதில்லை. பள்ளிப்படிப்பு வேலைக்கான உத்தரவாதம் என்று நம்புகின்றார்கள். ஆனால் வாசிப்பது வாழ்க்கைக்கான ஊட்டம் என்று யாரும் கருதுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் பள்ளி, கல்லூரி

படிப்புக்கு பிறகு வாசிக்கும் பழக்கம் ஒருவருக்கு இருக்கிறது என்றால் முதலில் குடும்பத்தினரும் பிறகு பிறரும் இந்தப்பழக்கத்தை ஒரு பிறழ்வு என்று கருதுகிறார்கள்.

## காதலுக்கு எதிரியா?

இன்றைக்கு நம் சமூகத்தில் பெரும்பாலான குடும்பங்களில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் இல்லை. கணவன் வாசிக்கும் பழக்கம் உடையவனாக இருந்தால் மனைவிக்கு அது பிடிப்பதில்லை. வீணான பழக்கம் என்று அவள் கருதுவாள். மனைவிக்கு புத்தகங்களில் ஈடுபாடு இருந்தால் கணவன் அதை கடிந்து பேசுவான். மனைவிக்கு பயந்து வாங்கிய புதுப் புத்தகத்திற்கு அழுக்கான செய்தித்தாளை தேடி எடுத்து அட்டை போட்டு மறைத்து எடுத்துச் செல்லும் கணவன்களை எனக்குத் தெரியும். அஞ்சலில் அனுப்ப வேண்டிய புத்தகமாக இருந்தால் தன் முகவரி அல்லாத வேறு ஒன்றைத்தந்து புத்தகத்தை அங்கே அனுப்பும் படி சொல்லும் கணவனையும் தெரியும். அதேபோல் ஒவ்வொரு புத்தகமாக கண்காட்சியிலும் புத்தகம் வாங்க நினைத்து கணவனைப் பார்க்கும் மனைவியை கண்ணால் ஜாடை செய்து தடுக்கும் கணவன்களைப் பார்க்கின்றேன். புத்தகங்களை விரும்பிப் படிக்கும் தம்பதியினரை அரிதாகவே பார்க்க முடிகிறது. இவர்கள் குழந்தைகளும் பெரும்பாலும் வாசிக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர்கள் புத்தகங்களை வாசிக்கும் போது குழந்தைகளின் ஆரோக்கியமான மனவளர்ச்சிக்கான சாத்தியங்கள் கூடுகின்றன.

## தன் நல வாழ்க்கை

கிட்டத்தட்ட எல்லோருக்குமே தங்கள் வாழ்க்கை, தங்கள் வேலை, தங்கள் குடும்பம் என்ற கவலைகளும், அக்கறைகளும், ஆர்வங்களும் தங்களைச் சுற்றியே அமைகின்றன. இவற்றில் எதுவுமே சமூகத்தின் தொடர்பு இல்லாமல் தனித்து

இயங்குவதில்லை. ஆனால் பொதுவாக யாருமே இதை ஆழமாக உணர்வதில்லை. இதனாலேயே பல நடைமுறைச் சிக்கல்கள் அவரவர் வாழ்க்கையில் தோன்றுகின்றன. இப்படித் தோன்றும் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் சரிவரக் கையாள வேண்டும் என்றால் ஒவ்வொருவரும் தங்களை மீறி தங்களுடைய குறுகிய உலகத்தை தாண்டிப் பார்க்க வேண்டும். இப்படிப் பார்க்க உதவுவது தான் வாசிப்புப் பழக்கம் இது மிகக் குறுகிய நோக்கம் என்றாலும் பயன் உள்ளது.

ஆனால் இதை விட முக்கியமான உந்துதல் வாசிப்புக்குப் பின்னால் செயல்படுகின்றது. அணுவில் தொடங்கி அண்டம் வரையிலான மாபெரும் இயக்கத்தைப்பற்றி பிரமிப்பு, நம் உடலைப்பற்றி, பரிணாம வளர்ச்சியைப் பற்றி, உலகத்தைப்பற்றி, பிரபஞ்சத்தைப்பற்றி பிரமிப்பு. நாம் அனைத்துடனும் தொடர்பு கொண்டிருக்கின்றோம். அந்த தொடர்பைப் பற்றிய நம் இயக்கம் முழுவதிற்கும் அடி நாதமாக இருக்கும் ஒழுங்கைப் பற்றிய பிரமிப்பு இந்த பிரமிப்புத்தான். அறிவியல் தொடங்கி இலக்கியம் வரை வெவ்வேறு வடிவங்களில் தோன்றி நம்மை ஈர்க்கிறது. இந்த ஈர்ப்பையும் பிரமிப்பையும் வாசிப்பு தக்கவைக்கிறது. நம் அன்றாட ஊட்ட சக்தியாக அதை மாற்றுகின்றது.

## இலக்கியம் மட்டும் வாசிப்பு அல்ல

இலக்கியத்தை வாசிப்பது மட்டும் வாசிப்பு என்று பரவலாக மட்டும் நினைக்கின்றார்கள். வாசிப்பு எந்தத் துறையைச் சார்ந்தும் இருக்கலாம். தன் தொழில் தொடர்பாக வாசிப்பதை வாசிப்பு என்று கொள்ள முடியாது. பல துறைப் புத்தகங்களையும் வாசிக்கும் போது தான் ஒருவருடைய வாசிப்பு வளமாகிறது என்று நாம் கூறலாம். இலக்கியம் ஒரு பகுதிதான் வரலாறு, பொது மக்களுக்கான அறிவியல், வாழ்க்கை வரலாறு, அரசியல், இசை என்று வாசிப்பு பல துறைகளையும் உள்ளடக்கி இருக்கும் போது தான் நம் உலகம் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைகிறது.

## முக்கியமான புத்தகங்கள் தான் வாசிப்பா?

ஒருவன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் நினைவு வைத்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு நாளும் விசேடமான நாளாக அமைவதில்லை. நம்மை தொடும் தருணங்கள் மட்டுமே நினைவில் இருத்திக் கொண்டு அவற்றை நம் வாழ்க்கைப் போக்கின் முக்கிய புள்ளிகளாக கொள்கின்றோம். வாசிப்பும் அவ்வாறு தான். வாசிக்கும் எல்லா புத்தகங்களும் முக்கியமானவை அல்ல. ஆனால் அவற்றின் வழியே தான் முக்கியமான புத்தகங்களை, நமக்கு ஊட்டம் அளிக்கும் புத்தகங்களை நாம் சென்றடைய முடியும்.

ஒருவர் முக்கியமான புத்தகங்களை மட்டும் படித்துக்கொண்டிருப்பது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லாதது. இன்னொரு பார்வையில் சாதாரண புத்தகம் என்பது கூட அர்ப்பமானது அல்ல. ஒவ்வொரு புத்தகத்தின் மூலம் உணர்வுகள், மொழி, பண்பாட்டு அடையாளங்கள், உலக நடப்பு என்று பல விடயங்கள் நமக்கு பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. இதை நாம் பிரக்ஞை பூர்வமாக உணர்வதில்லை. இந்த இலைச் செறிவுகள் தான் மேலும் ஆழமான பன்முகப்பட்ட எழுத்துக்களை வாசிக்கும் போது அடி உயரமாக செயற்படுகின்றன.

## புத்தகங்கள் எங்கே வைக்க வேண்டும்

வாசிப்பு நம் அன்றாட வாழ்க்கையின் அம்சமாக மாற வேண்டுமானால் எப்போதும் நம்மைச் சுற்றிப் புத்தகங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் கண்ணில் படும்படி புத்தக அலுமாரியை அமைக்க வேண்டும். புத்தகங்களுக்கு அட்டை போட்டு அடுக்கக்கூடாது. புத்தகங்கள் நம் கண்ணில் படும்படி இருந்தால் நம்மை அறியாமலேயே நம் கவனம் அவற்றை ஆழ்மனதுக்குச் செலுத்தும். இது நம்மைச்

சுற்றி எப்போதும் இசையோ ஓவியங்களோ இருப்பது போன்றது. நாம் வேறு காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும் இசையும் வண்ணங்களும் கலையின் ஒழுங்கும் நம்மை வந்து சேர்ந்து கொண்டே இருக்கும். வாசிப்பு என்பது புத்தகங்களை ஒருமுறை வாசிப்பது மட்டுமல்ல, மிகமுக்கியமான புத்தகங்களை நாம் அடிக்கடி வாசிக்க வேண்டும்.

இப்படி மீண்டும் வாசிப்பது முதல் பக்கத்தில் தொடங்கி வரிசையாகப் படித்துக்கொண்டு போவது அல்ல. மீண்டும் வாசிப்பது என்பது விட்டுவிட்டு சில நிமிடங்களே நாம் ஓய்வாக இருக்கும் போதும் கூட நிகழ்வது. இப்படி மீண்டும் படிப்பதற்கு நம் ஆழ்மனம் சில நேரங்களில் நம்மை உந்தும். இது பெரும்பாலும் நம் அன்றாட வாழ்க்கை, உணர்வுகளின் போக்குடன் நெருங்கிய தொடர்பைக் கொண்ட புத்தகங்களாகத்தான் இருக்கும் என்பது என் அனுபவம்.

## வளமாகும் கணங்கள்

இந்த மாதிரியான நேரங்களில் நாம் நமக்கு மிகமுக்கியமாகப் பட்டவற்றையே நாடுவோம். சில வரிகள், சில சக்திகள் போதும் நம்மை அப்புத்தங்களுடன் இணைக்க. இது ஓர் இசை. நம் மனதில் இசைக்கும் நேரங்களை ஒத்தது. அப்போது நாம் படிப்பது தாகூரின் கீதாஞ்சலியின் சில வரிகளாக இருக்கலாம், ந.முத்துஷாமியின் கதைகளாக இருக்கலாம், ஜே.கே.வின் சில வரிகளாக, அன்டோனியோ மச்சாடோவின் கவிதை, டபிள்யூ.ஜி.செபால்டின் செறிவான மொழி, காம்யுவின் மனச் சலனப்பதிவுகள்... எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு முக்கியமான புத்தகமும் நம்முடன் நெருங்கிவந்து நம் வாழ்க்கையின் கணங்களை வளமாக்கச் செய்வதை உணர்வது அற்புத அனுபவம். புத்தக அலுமாரியின் முன் நிற்கும் போது மனம் புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் நம் உணர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

## அவசியம் இருக்க வேண்டிய 3 புத்தகங்கள்

தமிழராகிய நம் ஒவ்வொருவர் வீட்டிலும் கண்ணில்படும்படி மூன்று புத்தகங்கள் எப்போதும் இருக்க வேண்டும். ஒன்று நல்ல தமிழ் அகராதி, இரண்டாவது ஆங்கில அகராதி, மூன்றாவது அட்லஸ். இந்த மூன்றையும் தினமும் ஒருதடவையாவது புரட்டிப் பார்ப்பது நாம் வாழ்கின்றோம் என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்வதாக அமையும். எல்லாவற்றையும் விட முக்கியமாக வீட்டில் படிப்பதற்கென்று ஓர் அறை ஒதுக்கப்பட வேண்டும். பல இலட்சங்கள் கொடுத்து வீட்டைக் கட்டும் நாம் இதற்கென ஒரு சிறிய இடத்தைத்தானும் ஒதுக்காமலிருப்பது அறிவீனர்கள் என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துவிடும். மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்களின் மையமாக இக்கட்டுரையை வாசிக்கும் ஒவ்வொருவரும் உங்களையும் உங்களை நேசிப்போர் அனைவரையும் வாசிப்புப் பழக்கத்திற்கு வழிநடத்திச் செல்வீர்களாக எதிர்பார்ப்பதோடு எமது அருஞ் சொத்தாக ஆண்டாண்டு காலமாக எமது பரம்பரைக்கு கல்வியின் கலங்கரை விளக்கமாக திகழும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதோடு அவற்றினை மேலும் பயனுள்ளதாக மாற்றுவதற்கு உங்களாலான உதவியையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

# தேசிய வாசிப்பு மாதம், உள்ளூராட்சி மாத நிகழ்வுகளின் பதிவுகள் - 2016













**தேசிய வாசிப்பு மாத,**
**உள்ளூராட்சி மாத**
**நிகழ்வுகளின் பதிவுகள்**
**2016**



தேசிய வாசிப்பு மாத, உள்ளூராட்சி மாத
நிகழ்வுகளின் பதிவுகள் - 2016






# அலைகள்

**து. உஷாந்தினி**

தன்னாட்சி வீதி, இயக்கச்சி,
பளை.

கடல்களின் மேனிகள் மீது
பாய்விரிக்கும் அலைகள்
கரைகளில் வந்து மாண்டும்
மீண்டெழும் அலைகள்
அடுக்கடுக்காய் கூடிவரும்
மறுகணமே சீறிவரும்
எதிர்த்து நிற்பவரை கண்டால்
மோதித் தள்ளும்
கடலுக்கு காவலனாய் காவல்
செய்யும் அலைகள்
நாங்கள் விழித்தே இருக்கின்றோம் என
கட்டளையிடும் அலைகள்
கடல்களின் மேனிகளை பாதுகாப்பதில்
அலைகளின் தீவிரம்
தூக்கம் மறந்து காக்கும் அலைகள்
உறவுகளின் மறு உருவங்கள்
கடலின் தாயின் மடியில்
எங்கள் உறவுகள்
அன்னையின் தாலாட்டு இந்த
அலைகளே
உங்கள் இரச்சல்களின் எழுச்சி
உறங்கிய தமிழ் உறவுகளை
உருவாக்கியது கடல்களில் எங்கள்
ஆதிக்கம் அலைகளாய்
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இங்கு
உறங்குகின்றனர்
அலைகளே பார்த்துக் கொள்ளுங்கள்
எங்கள் உறவுகள் உறங்குகின்றார்கள்
உறக்கத்தை கலைத்திடாதீர்கள்
பாதியிலே மாண்டு விட்டவர்கள்

## சிறுகதை

# அழியாத சீதனம்

*செல்வி பாலாஜினி பாலசிங்கம்*
வண்ணாங்கேணி தெற்கு, பளை

பட்டுச்சேலை உடலைத் தொட்டுத் தழுவிட மும்முரமாக வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். இலக்கியத் தொகுப்பாளியான வாசனா. அன்று அவள் வீட்டில் ஒரு விஷேஷம். அவள் தான் நாயகியும் கூட. ஆனால் மற்றவர்களுடன் சேர்ந்து தன் பங்கிற்கும் அவள் முயன்று கொண்டிருந்தாள்.

"வாசனாச் செல்லம், மாப்பிள்ளை வீட்டுக்காரங்கள் வாற நேரமாச்சு நீ போய் இரம்மா"

என்று பட்டு மாமியும் அவளின் வேறு சில உறவினர்களும் சொல்லிப் பார்த்துவிட்டார்கள் வாசனா கேட்கவேயில்லை.

"மாமி நானும் செழியனும் காதலர்கள் இந்த நிச்சயதார்த்தம் எல்லாம் வெறும் சம்பிரதாயத்திற்குத்தானே"

என்று சொல்லி அவர்களை சமாதானப்படுத்தி விட்டாள். வாசனாவிற்கு அப்பா, அம்மா யாருமே இல்லை. தனது பன்னிரண்டு வயதுவரை அவள் பிறந்து வாழ்ந்ததெல்லாம் அமெரிக்கா தான். ஆனாலும் அம்மா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்ததும் அவள் தந்தை சுந்தரேசன் அவளை தாய் வழிப்பாட்டி மங்கம்மாவிடம் விட்டு விட்டு வேறு திருமணம் செய்து கொண்டு போய்விட்டார். அதிலிருந்து அவள் வளர்ந்ததெல்லாம் இந்த மல்லிகைப்பந்தல் கிராமத்தில் தான். பாட்டி மங்கம்மாவினுடைய வளர்ப்பானது அவளை அச்சு அசலாக ஒரு தமிழ்ப்பெண்ணாகவே மாற்றி விட்டது. சொல்லிலும் செயலிலும் அப்படித்தானிருந்தாள்.

சேலை அணிந்து, தலை வாரித் தாழ முடிந்து அதில் எப்போதும் ஒரு ரோஜா மலரை சூடியிருப்பாள். கணீர், கணீர் என்கின்ற

அவள் கொலுசு ஓசை வருவது வாசனா தான் என்பதை சொல்லிவிடும். படித்து முடித்துவிட்டு வானொலி ஒன்றிலே இலக்கியத் தொகுப்பாளியாக வேலை பார்த்துக்கொண்டிருக்கின்றாள். தனக்கு கிடைக்கும் சொற்ப பணத்தில் கொஞ்சம் சமூக சேவைக்கும் ஒதுக்கி விடுவாள். அதனால் ஊர் முழுக்க பிரபல்யம். அப்படி அறிமுகமானவன் தான் செழியன். அவனும் ஒரு சமூக சேவையில் ஈடுபடுகின்ற வைத்தியர் தான். இலவசமாக தனது சேவைகளை சமூக மக்களிற்கு வழங்கி வந்தான். அதிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மல்லிகைப்பந்தல் கிராமத்தின் மேல் அவனுக்குத் தனிப் பிரியம்.

இவனுடன் வாசனாவிற்கு ஏற்பட்ட அறிமுகம் தான் இன்று காதலாகி நிச்சயதார்த்தம் செய்யுமளவிற்கும் வந்துவிட்டது.

"வாசனா என்ன இது கையிலே பழத்தட்டை வைத்தபடி யோசனை, என்னம்மா என்னாச்சு நாங்க உனக்கு ஏதும் குறை வச்சிட்டமாம்மா"

என்ற பவளமக்காவின் குரல் கேட்டு திரும்பிய வாசனா "ஐயோ, இல்லை அக்கா நான் செழியனைப் பற்றித் தான் நினைச்சுக் கொண்டிருந்தனான்" என்று சொல்லிச் சிரித்தாள். அதைக் கேட்ட பவளமும் ஆசையுடன் அவளை முத்தமிட்டு

"என் செல்லம் திருஷ்டிபடப் போகுது" உனக்கு என்று சொல்லி நெட்டி முறித்துவிட்டுச் சென்றாள். புன்னகைத்தபடி நின்றிருந்த வாசனாவை வாசலில் கேட்ட கார்ச் சத்தம் திடுக்கிட வைத்தது. மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்கள். என்பதை அறிந்த அவள் அப்போதுதான் நாணம் வந்தவளைப் போல வீட்டினுள் ஓடிச் சென்று மறைந்து விட்டாள்.

அவள் உறவினர்கள் எல்லோரும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை அன்புடன் வரவேற்று அமரவைத்தார்கள். செழியனினுடைய கண்களோ வண்டுபோல வட்டமிட்டு வாசனாவை தேடிக்கொண்டிருந்தன. செழியனின் தாய் முதலில் பேச்சை ஆரம்பித்து வைத்தாள்.

"இஞ்ச பாருங்கோ எனக்கு வாசனாவை முதலே தெரியும். செழியன் வந்து சொல்லேக்கயே எனக்கு பிடிச்சு போச்சு. இனி செழியன்ர அப்பாதான் பார்க்க வேணும் வாசனாவை கூப்பிடுங்கோ"

என்றாள். பட்டுமாமியும் வேறுசிலரும் வாசனாவைக் கூட்டி வந்தனர். வாசனா எல்லோருக்கும் தேநீர் பரிமாறினாள். வெட்கப் புன்னகையுடன் செழியனையும் ஓரிரு தடவை நோட்டம் விட்டாள். தேநீரைப் பருகிய செழியனின் தந்தை

"அம்மா வாசனா நீ எப்ப எங்கட வீட்டுக்கு வருவாயம்மா இந்த கிழவனுக்கு ரீ போட்டுத் தர" என்று கேட்டார். அதைக் கேட்டதும் எல்லோர் முகத்திலும் பெரிய புன்னகை படர்ந்தது. பட்டுமாமியோ பெரிதாக சத்தமிட்டு சிரித்தவாறே "எனக்கு முதலே தெரியும் உங்களுக்கு வாசனாவை பிடிக்கும் என்று"என்று சத்தமாக கூறினாள். அதற்கிடையில் செழியனின் தாய் மரகதம்

"சரி வாசனா நீ எங்க வீட்டுக்கு வரும்போது என்ன கொண்டு வருவாய்" என்று கேட்டுவிட்டாள் அதைக் கேட்டதும் கூட்டத்தில் திடீரென அதுவரை இருந்த சிரிப்பொலி மறைய எங்கும் அமைதி குடி கொண்டது. ஆனால் வாசனாவின் முகத்தில் மட்டும் குழந்தை தனம் குடிகொண்டது.

"மாமி, நான் உங்கட வீட்டுக்கு சீதனமா கொண்டு வாறதுக்கு ஒரு பெரிய சொத்தே சேர்த்து வைச்சிருக்கன். உள்ள வாங்க காட்டிறன்" என்றவாறு குழந்தை போல் உள்ளே ஓடினாள். மரகதமும் வாசனா சொல்வது எதைப்பற்றியதாக இருக்கும் என்ற ஆவலில் அவள் பின்னே சென்றாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிட வைத்தது. வாசனா ஒரு பழைய காலத்து படடுச்சேலையையும், ஒரு பெரிய புத்தகத்தையும் அணைத்தவாறு கண்கலங்க நின்று கொண்டிருந்தாள். மரகதமோ

"வாசனா என்ன இது ஏதோ பெரிய சொத்து எண்டு சொன்னியே இப்ப இதுகளை காட்டிறியே என்ன இது"

என்றாள். வாசனாவோ அழுதபடியே "மாமி, அம்மா செத்ததுக்கு பிறகு என்னை வளர்த்தது எல்லாம் பாட்டி தான். எனக்கு அப்போ பன்னிரண்டு வயது. அமெரிக்காவில் இருந்து வந்த போது சுத்தமா தமிழ் தெரியாது. பாட்டி தான் எல்லாம் பழக்கிவிட்டவா. அப்போ எனக்கு பாட்டியை கொஞ்சம் கூட
பிடிக்காது ஏன் தெரியுமா"

என்று கேட்டுவிட்டு மரகதத்தின் முகத்தைப் பார்த்தாள். அதற்கு அவளிடம் எந்த பிரதிபலிப்பும் இல்லாது போகவே மேலும் தொடர்ந்தாள்.

பாட்டி எப்ப பார்த்தாலும் தமிழையே
படி படி எண்டு சொல்லுவா. நிறைய
தமிழ் புத்தகமெல்லாம் வாங்கித் தருவா
அதையெல்லாம் நான் வேண்டா வெறுப்பா
தான் வாசிச்சனான். ஆனால் பிறகு
தான் எனக்கு வாசிப்போட அருமையும்
எங்கட தமிழ் மொழியின்ர பெருமையும்
தெரிய வந்தது. வாசிப்பு என் சிந்தனையை
அதிகமாக்கியது. எனை சிறப்பாக
வாழ வைச்சது. மாமி இண்டைக்கு நானும்
இந்த சமூகத்தில ஒரு நல்ல மதிப்போட
வாழுறன் என்டா அதற்கு காரணம்
பாட்டி தந்த வாசிப்புத் தான்

என்று கூறிவிட்டு மரகதத்தை ஏக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கூறிய வார்த்தைகளால் நெஞ்சம் நெகிழ்ந்து போயிருந்த மரகதம்

"வாசனா கண்ணு அதெல்லாம் சரி ஆனால் இது என்ன" என்று கேட்டாள்.

"மாமி, இது பாட்டியோட சேலை. இது பாட்டி எனக்கு முதல் முதலாக தந்த தமிழ் அகராதிப் புத்தகமும் அதனோடு இணைக்கப்பட்டிருக்கின்ற ஔவையார் கதைகளும். அது தான் நான் சேமிச்சு வைச்ச சொத்து. இதைத்தான் உங்க வீட்டுக்கு கொண்டு வரப் போறேன்"

என்று சலனமே எதுவுமற்று பதில் சொன்னாள். அதைக் கேட்ட மரகதம் அந்த இரண்டையும் வாங்கி தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டே

"அப்படியெண்டா அது என்கிட்ட இருக்கட்டும். ஏன் தெரியுமா. என் பேத்திக்கு அதை பத்திரமா வச்சு இருக்கவேணுமல்லோ"

என்றவாறு வாசனாவை அணைத்து உச்சிமோந்தாள்.

-முற்றும்-

# புற்றுநோயிற்கான காரணங்களும் நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளும்

**Dr.Mrs.S.Shanmugabriya (BSMS)**
Ayurvedic Medical officer
Pachchilaipalli Pradeshiya sabha.

இன்றைய உலகில் மனிதனின் உணவுப் பழக்க வழக்கங்களே பெரும்பாலான நோய்களிற்கு காரணம். "உணவே மருந்து மருந்தே உணவு" என்று கூறுகிறது சித்த மருத்துவம். புற்றுநோயின் 33% எமது உணவுப் பழக்கவழக்கங்களாலேயே ஏற்படுகின்றது.

'வருமுன் காப்பதே சிறந்தது' என்பதற்கு இணங்க புற்றுநோய் உண்டாகக் காரணமான உணவுப் பழக்கவழக்கங்கள், காரணிகள், உணவு வகைகள் என்பவற்றை அறிந்து அவற்றை தவிர்ப்பதன் மூலம் எம்மை புற்றுநோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

## புற்று நோயின் எச்சரிக்கை அறிகுறிகள்

√ உடம்பில் கட்டிகள், தழும்புகள் ஏற்படல் அல்லது பல காலமாக இருந்து திடீரென வளர்ச்சி அடைதல்.

√ மார்பகங்களில் அல்லது உடலின் வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள்.

√ அதிக காலம் உடலில் நீடித்துக் காணப்படும் அஜீரணம் அல்லது உணவு விழுங்கக் கஸ்டம்.

√ நீண்ட காலம் இருமல், திடீரென குரல் மாறி நீண்டகாலம் நிலைத்திரல்.

√ மலம், சலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்துடன் இரத்தம் வெளியேறுதல்.

√ உடல் மெலிதல், பசியின்மை, சுறுசுறுப்பின்மை, களைப்பு, காரணமற்ற நீண்ட காய்ச்சல்.

√ பெண் யோனிவழியே அசாதாரண குருதி வெளியேறல் அல்லது வெள்ளைப்படுதல், மாதவிடாய் நின்றபின் (Menapause) குருதி வெளியேறல்.

## புற்றுநோயை ஏற்படுத்தும் உணவு வகைகளும் பழக்கவழக்கங்களும்

☞ சூடான உணவு, பானங்கள், பொரித்த உணவு உட்கொள்ளல்.

☞ கொழுப்பு, சீனி, உப்பு அதிகளவாக உட்கொள்ளல்.

☞ மது அருந்துதல்.

☞ பீடி, சிகரட் புகைத்தல்.

☞ செயற்கை நவநாகரிக உணவு வகைகளை அதிகம் உண்ணல். (பீசா (Pizza), பர்கர் (Burger), பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள்)

☞ கிருமி நாசினி, பூச்சிகொல்லி விசிறிய மரக்கறிகளை உண்ணுதல் (கிருமி நாசினி விசிறி 3அல்லது 4 நாட்களின் பின் மரக்கறிகளை நன்கு கழுவிய பின் பயன்படுத்துவதே சிறந்தது)

☞ இரசாயன உரங்கள் பயன்படுத்திய உணவுகளை உண்ணுதல்.

☞ போமலின் போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் சேர்த்து பழுக்கவைத்த பழங்களை உண்ணுதல்.

☞ வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை போன்றவற்றை வாயில் போட்டு தொடர்ச்சியாக வைத்திருப்பதனால் வாய்க்குழிப் புற்றுநோய் ஏற்படும்.

## புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும் உணவுப் பழக்கவழக்கங்கள்

- ✈ கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அவித்தோ, நெருப்பில் வாட்டியோ சமைத்து உண்ணல்.
- ✈ தினமும் உணவில் உள்ளி, தக்காளி சேர் உணவு வகைகளை உண்ணல்.
- ✈ கறுப்பு தேயிலையைவிட பச்சைத் தேயிலை (Green Tea) தேநீர் அருந்துதல் சிறந்தது.
- ✈ கருகிய (Nitrosamine), பூஞ்சணம் பிடித்த (Aflo Toxin) உணவுகளை தவிர்த்தல்.
- ✈ மாமிசம் சமைக்கும் போது தோலையும் கொழுப்பையும் நீக்கி சமைத்தல்.
- ✈ தினமும் 1கிளாஸ் தோடம்பழச்சாறு அருந்தி வந்தால் மார்பக புற்றுநோய் வராது.
- ✈ சோயா சேர்ந்த உணவு உண்ணல்.
- ✈ தினமும் அரை கப் பூசணிக்காய் உண்ணல்.
- ✈ தினமும் மரக்கறி, பழங்கள் உண்ணல்.

***புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து முறையான சிகிச்சை மூலமும் தகுந்த உணவின் மூலமும் நோயாளியை நீண்ட காலம் வாழச் செய்யமுடியும். ஒரு புற்று நோயாளி ஆரோக்கியமாக வாழ்வதற்கும் உடலுக்கு தேவையான சக்தி போசாக்கு என்பவற்றை வழங்குவதற்கும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், கலங்களின் புத்துயிர்ப்பிற்கும் உணவு இன்றியமையாது.***

சாதாரணமாக ஒவ்வாமை (Allergy) உள்ள உணவுகள் புற்று நோயாளிக்கு ஒவ்வாமைத் தன்மையை கூடுதலாக்கலாம் அவ்வாறான உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

புற்றுநோய் ஏற்பட்ட ஒருவரிற்கு விற்றமின் A, விற்றமின் C, செம்பு, இரும்பு, மக்னீசியம், நாகம் போன்ற விற்றமின் கனியுப்புக்கள் அவசியமாகும். ஆகவே இவை காணப்படும் உணவுகளை வழங்குவது அவசியம்.

## புற்றுநோயாளிகளுக்கு

### *1. நிறைக் குறைவு ஏற்பட்டால்...*

- சிறிது சிறிதாக அடிக்கொரு தடவை உணவு கொடுத்தல்.
- அதிக சக்தி வழங்கக்கூடிய உணவுகளை உண்ணலாம். (புரத உணவு சிறந்தது)

### *2. நிறை அதிகரிப்பு ஏற்பட்டால்...*

- மரக்கறி, பழங்கள், தானியங்கள் உண்ணல்.
- சாப்பிடும் அளவைக் குறைத்தல்.
- பசித்தால் மட்டும் உண்ணுதல்.

### *3. வயிற்றோட்டம் ஏற்பட்டால்...*

- அடிக்கடி கொதித்தாறிய நீர் அருந்துதல்.
- அதிக சூடு, அதிக குளிரான உணவுகளை தவிர்த்தல்.
- மதுபானம், பொரித்த உணவுகள், அதிக கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்த்தல்.
- தயிர், யூஸ், சூப் வகைகள் அருந்துதல்.

### *4. மலக்கட்டு ஏற்பட்டால்...*

- தினமும் 8 கிளாஸ இற்கு மேல் நீர் அருந்துதல்.
- ஒவ்வொரு அரை மணிக்கு ஒருதடவை இளஞ் சூடான பானம் அருந்தினால் குடலசைவு கூடி மலம் வெளியேறும்
- பழங்கள், நார்ச்சத்துள்ள உணவுகள், தவிடுள்ள தானியங்கள் போன்றவற்றை உண்ணல்,
- தினமும் நடப்பது, நல்ல உடற் பயிற்சி.

*5. வயிற்றுப்பிரட்டல், வாந்தி ஏற்பட்டால்...*

- குறைந்தளவு உணவுகளை மெல்ல மெல்ல உண்ணல்.
- வசிக்கும் அறை காற்றோட்டம் உள்ளதாக சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- தேசிப்புளி, தோடை, நாரத்தை அருந்துதல்.
- குளிரான உணவுகளை தவிர்ப்பது நன்று.
- சாப்பிடும்போது நின்று சாப்பிடாமல் இருந்து சாப்பிடல். படுக்கும்போது தலையை சற்று உயர்த்தி வைத்துப் படுத்தல்.
- எண்ணெய், கொழுப்பு வகைகளைத் தவிர்த்தல்.
- யோகாசனம், தியானம் சிறந்த பயனைத் தரும்.

*6. தொண்டை, நாக்கு, வாயில் புண்கள் ஏற்பட்டால்...*

- பழங்கள், சூப், சீஸ், புடிங், ஜெலி, முட்டை, யோகட், தயிர் போன்றவற்றை உண்ணல்.
- புளிப்பு, உறைப்பு, வினாகிரி சேர்த்த உணவுகளை உண்பதைத் தவிர்ப்பது நன்று.
- மதுபானம், புகைத்தல் தவிர்க்க வேண்டும்.
- தினமும் தூய நீரால் வாய் கொப்பளித்தல் வேண்டும்.
- பல் துலக்க மென்மையான தூரிகை பயன்படுத்தல்.

*7. விழுங்க கஸ்ரம் ஏற்பட்டால்...*

- தினமும் 8 கிளாஸ் நீரையாவது அருந்துதல்.
- அடிக்கடி சிறிது சிறிதாக உண்ணல்.
- அடர்த்தி கூடிய திரவ உணவுகளை (ஜெலி, புடிங்) கொடுத்தால் விழுங்குதல் எளிது.
- சூடான உணவு அருந்தக் கூடாது.
- தாடைக்கு பயிற்சி (Exercise) செய்தல்.

***8. சுவையின்மை / சுவையில் மாற்றம் ஏற்பட்டால்...***

- உணவை சுவைபட சமைத்து உண்ணல்.
- சுடச்சுட உண்ணாமல் நன்கு ஆறியபின் குளிரான உணவை உண்ணல்.
- உலோக பாத்திரத்தை விட மட்பாண்டம் பாவித்து சமைத்தல் சிறந்தது.
- வாய்ச் சுகாதாரத்தை நன்கு பேணல்.

***9. உடலில் வீக்கம் ஏற்படின்...***

- உள்ளெடுக்கும் உப்பின் அளவை குறைத்தல்.
- இருக்கும்போது காலைத் தூக்கி உயரத்தில் வைத்திருத்தல்.
- படுக்கும்போதும் தலையணை இட்டு காலை உயர்த்தி வைத்திருத்தல்.

***உணவுப் பதார்த்தங்களும் பாதிக்கப்படும் உடற்பகுதிகளும்***

| உணவுப் பதார்த்தம் | பாதிக்கப்படும் உடற்பகுதிகள் |
|---|---|
| புகையிலை | நுரையீரல், களம், சிறுநீரகம் சிறுநீர்ப்பை, |
| மதுபானம் | வாய்க்குழி, தொண்டை, களம், ஈரல், நுரையீரல் |
| அதிக கொழுப்பு (இறைச்சி வகை) | குடல், மார்பகம், முன்னிற்கும் சுரப்பி (Prostate gland) |
| சூடான, காரமான உணவுகள் | வாய்குழி, தொண்டை, களம் |
| அதிக உப்பு | இரைப்பை |
| மிகை நிரப்பு பதார்த்தங்கள் | வாய்க்குழி, இரைப்பை சிறுநீர்ப்பை |

## *உள்ளியின் மருத்துவப் பயன்கள்* - Garlic

தாவரவியற் பெயர் - **Allium Sativum**

*காணப்படும் இரசாயணப் பதார்த்தங்கள்* (Chemical Substance)

Allin, Allinase, Allicin, Ailylprophyl disulphide, Di Allyl trisulphide, Menthyl Allyl thiosulfinate, Allyl Mercaptan, Alliyin.

புற்றுநோயை தடுக்கும் தன்மைக்கு காரணமான (Inhibit Ca) பதார்த்தங்கள்

Allicine
Allinase
Allixin
Allyl mercapton

என்னும் இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளியில் காணப்படுவதால் புற்றுநோயைத் தடுக்கும் இயல்புடையது.

நுண்ணுயிர்க் கொல்லியாக தொழிற்படுவதற்கு (Antibiotic) காரணமான பதார்த்தங்கள்

Allicine
Allinase
Allyl propyl disulphide
Diallyl tri sulphide
Methyl Allyl thiosulfinate

*உள்ளி எல்லா விதமான நுண்ணுயிர்களையும்* ***(Antibacterial, Antifungal, Antiparasitic, Antiviral)*** *கொல்லும் என்று* ***Dr. Tariq Abdullah*** *(பனாமா சிற்றி, புளோரிடா, அக்பர் ஆராட்சி நிலையம் 1987) கூறியுள்ளார்.இவர் தனது ஆராட்சியில் நுண்ணுயிர்த் தொற்றுக்கு உட்பட்ட எலிகளில் ஒரு பகுதி*

*எலிகளுக்கு உள்ளிச்சாறும் மறுபகுதி எலிகளுக்கு நுண்ணுயிர்க்கொல்லி **Tetracyclin** நுண்ணுயிர்க்கொல்லியும் கொடுத்துப்பார்த்தபோது உள்ளிச்சாறு கொடுத்த எலிகள் விரைவில் நன்கு குணமடைந்தது. உள்ளித்தைலம் நுண்ணுயிர்க் கொல்லியாக பயன்படுத்தப்படுகிறது.*

*உள்ளியில் குருதி அமுக்கத்தை **(Blood Pressure)** கட்டுப்படுத்தும் இயல்பு உண்டு **(Tirtha 1998)***

*குடற்புழுக்களை அகற்றுவதற்கும், உள்ளி பூச்சி நீக்கியாகவும் பயன்படும் **(WHO 1979)***

*"வெள்ளைப் பூண்டு பத்து தாய்க்கு சமன்*
*இரத்தக் கொதிப்பிற்கு வெள்ளைப் பூண்டு"*

உள்ளி இலை விஷக்கடியில் நச்சு நீக்கியாகப் பயன்படும் (Pilny the Elder 23.79AD) என்னும் ரோமானியர் கூறியுள்ளார்.

## உள்ளிச் சேர்வை

- உள்ளிச் சாற்றுடன் தேன் சேர்த்து **புள்ளி, தழும்புகளுக்கு** பூசும் போது குணமடையம்.
- **வெண்புள்ளி, ஸ்கேபீஸ், காளாஞ்சுப்படை (Psoriasis)** நீக்குவதற்கும் இந்தச் சேர்வை பயன்படுத்தலாம் (Airola 1978)
- **சிறுநீரகக் கற்களுக்கு** உள்ளியை சிறிது சிறிதாக நறுக்கி வெள்ளை வைன் இனுள் இட்டு நன்றாக சேர்த்தபின் சுத்தமான துணியால் வடித்து உட்கொள்ள குணமாகும். சிறுநீர்ப்பெருக்கியாகவும் தொழிற்படும் (Nakkarani 1982)
- **கர்ப்பகாலத்தில் அல்லது வலிப்பின் போது ஏற்படும் மயக்க நிலமைகளில்** அரைத்த உள்ளிச் சேர்வையை மணிக்கட்டு, உள்ளங்கை போன்ற பகுதிகளில் தேய்ப்பதன் மூலமோ

அல்லது மூக்கிற்கு அருகே வைத்து சுவாசிப்பதன் மூலமோ குணமாக்கலாம்.

- பூச்சு சேர்வைகளில் உள்ளி சேர்க்கப்பட்டு கழுத்து நெஞ்சுப் பகுதிகளில் வெளிப்பிரயோகமாக பூசுவதன் மூலம் குக்கல், நெஞ்சுவலி குணமாகும்.
- சிறுநீருடன் இரத்தம் போகும் நிலமைகளில் உள்ளிச் சாற்றுடன் நீர் சேர்த்து இளஞ்சூடாக பருக குணமாகும்.

## லசுன தாபிதம் (Tonsilitis)

இந்நிலமைகளில் ***"பூண்டுத்தேன்"*** வெளிப்பிரயோகமாக பிரயோகிக்க குணமாகும்

## பூண்டுத்தேன் தயாரிப்பு முறை

உள்ளியை நன்கு அரைத்து பருத்தித் துணியில் பூசி திரி போல அதை உருட்டி மெழுகுதிரி சுவாலையில் சற்று சூடாக்கிய பின் பிழிய வெளிவரும் திரவத்தை சேகரித்து தேனுடன் கலந்து (சமஅளவு) **பூண்டுத்தேன்** தயாரிக்கப்படும்.

# *பச்சிலைப்பள்ளியிருக்கும் பரந்தாமா*

சி.கனகசிங்கம்
தலைவர், முருகந்த நகர் கிராம அபிவிருத்தி சங்கம்

பச்சிலைப்பள்ளியிருக்கும் பரந்தாமா
எங்கள் பத்தர் குறை தீர்த்தருளும் ஸ்ரீராமா
வேண்டுவோர் வினை தீர்க்கும் வேணுகோபாலா
வேந்தர்கு தேரோடும் விஸ்ணு வர்த்தனா
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

மல்வில் பதியுறையும் மாய கிருஸ்ணா
மான் மேயும் வண மருகில் ராமகிருஸ்ணா
உந்தன் புல்லாங்குழலோசையிலே புரிசோத்தமா
கோமாதாக்கள் கூடிடுமே கோபிகண்ணா
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

ஆலமரச் சோலையிலேயிருந்து அரிராமா
எமை ஆண்டருள் செய்திடுவீர் கரிராமா
பாம்பணையில் பள்ளிகொள்ளும் அரவிந்தா
எங்கள் பக்தர்களைக் காத்திடுவீர் கோபிந்தா
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

மல்வில் குள மருகிலிருக்கும் எங்கள் மாயவனார்
மதி நுட்பம் நிறைந்த எங்கள் தூயவனார்
காத்தல் தொழில் புரியும் எங்கள் கண்ணபிரான்
இந்த கலியுகத்தில் ஒரு மாய பிரான்
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

பாண்டவர்கு துணைநின்ற பாண்டுரங்கா
எங்கள் பாஞ்சாலி புகழ் காத்த பால கிருஸ்ணா
பாரதப்போர் முடித்த மோகனக் கண்ணா
எமக்கு பகவத்கீதை தந்த கண்ணபிரான்
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

கோகுலத்தில் வாழும் எங்கள் கோகுலக் கண்ணா
பூங்கோதையின் மடியினிலே கோபால கிருஸ்ணா
பார்புகழும் எங்கள் பதியுறையும் ஜெயராமா
எமக்கு வேண்டும் வரம் தந்தருளும் ஸ்ரீநாராயணா
பச்சிலைப்பள்ளியிருக்கும்...

"ராத ஜெயம் ஸ்ரீ ராம ஜெயம்"
"ராத ஜெயம் ஸ்ரீ ராம ஜெயம்"

# கற்க வேண்டிய வயதில் கற்றுக்கொள்

**நவரத்தினராசா நிரோசன்**
2015 A/L Com.
முல்லையடி பளை.

ஒரு வயதில் பேசக்கற்றுக்கொள்
இரண்டு வயதில் விளையாடக் கற்றுக்கொள்
மூன்று வயதில் தாய்மொழியைக் கற்றுக்கொள்
நான்கு வயதில் நல்லவற்றைக் கற்றுக்கொள்
ஐந்து வயதில் எழுதக் கற்றுக்கொள்
ஆறு வயதில் எண்ணைக் கற்றுக்கொள்
ஏழு வயதில் ஒழுக்கத்தை கற்றுக்கொள்
எட்டு வயதில் சரிபிழை அறிந்து கற்றுக்கொள்
ஒன்பது வயதில் பலவற்றையும் கற்றுக்கொள்
பத்து வயதில் நுட்பமாக கற்றுக்கொள்
பதினொரு வயதில் சமூகம் பற்றிக் கற்றுக்கொள்
பன்னிரண்டு வயதில் உணர்வுகளைக் கற்றுக்கொள்
பதின்மூன்று வயதில் பக்குவமாய்க் கற்றுக்கொள்
பதினான்கு வயதில் தன்நம்பிக்கையுடன் கற்றுக்கொள்
பதினைந்து வயதில் சுயமாகக் கற்றுக்கொள்
பதினாறு வயதில் விடாமுயற்சியுடன் கற்றுக்கொள்
பதினேழு வயதில் தேடித் தேடிக் கற்றுக்கொள்
பதினெட்டு வயதில் அறியாத அனைத்தையும் கற்றுக்கொள்
உன் உயிர் இவ்வுலகில் உள்ளவரை நூலகம் சென்று
பத்திரிகையைக் கற்றுக்கொள்......

# ஈர நினைவுகள்

**சுதன் – தேன் அன்பன் வாணி**
சங்கத்தார்வயல், இயக்கச்சி.

கடைசி நிமிடம் கண்களில்
காலை கலைந்து நிஜத்தை
நினைத்த நிமிடம்
எனது என்று சொந்தம் பேசி
கட்டித் தழுவிய உன்னை
அந்நியனாக உன்னை விட்டு விலகிய நிமிடம்
கண்களில் வலி
கன்னத்தில் ஈரம்
ஈரம் உனது இதழ்கள்
வரைந்த கோலம் அல்ல
என் இதயம் வரைந்த சுவடுகள்
காலப் போக்கில் கரைந்துவிட்டது ஈரம்
காலம் கடந்தும் கரையாத
கோலமாய் உன் நினைவுகள்
மட்டும் ஈர நினைவுகளாய்
இன்றும் என்னிடம்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அண்மைக்கால அபிவிருத்திப் பணிகள்

– ஓர் நோக்கு

திருமதி. வசந்தா மகாலிங்கம்,(BA, MA)
உள்ளூராட்சி உதவியாளர்.
திட்டமிடல் கிளை,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையானது இலங்கைத் தீவின், வடக்கு மாகாணத்திலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் மூன்று பிரதேச சபைகளில் ஒன்றாகும். இப்பிரதேச சபை 167.7 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 42 கிராமங்களை உள்ளடக்கிய 18 கிராம அலுவலர் பிரிவுகளை கொண்டுள்ளது. இப்பிரதேச சபை 6 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட மூன்று உப அலுவலகங்களாக வகுக்கப்பட்டு அவற்றிற்கூடாக தமது பணிகளை செவ்வனே ஆற்றிவருகின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கான அபிவிருத்தித் திட்டமிடலின் சிந்தனையை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தனது நுழைவாயிலில் தூரநோக்கு (Vision) வாசகமாக பொறித்துள்ளது.

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தூரநோக்கு (Vision)

"பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் வலுவான பொருளாதாரத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை உருவாக்குதல்"

அந்த வகையில் சபையின் நிதி வளத்தை படிப்படியாக அதிகரிக்கவும், அதனால் அபிவிருத்திச் செயற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்றவும் திட்டமிட்டுள்ளது.

## ➢ பிரதேச சபைக்கு நிதி கிடைக்கப்பெறும் வழிகள்

1. சபையின் நியதிச் சட்டங்களாலும், கட்டளைச் சட்டங்களாலும் குறிப்பிடப்பட்ட வளங்களிலிருந்து பெறப்படற்பாலதான வருமானங்களான வீத வரிகள், வாடகைகள், உரிமங்கள், குத்தகைகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் என்பனவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் (Council Fund)
2. முத்திரைத் தீர்வைகள், குற்றப்பணங்கள் மற்றும் தண்டங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம். (Stamp Duty & Courts Fine)
3. மாகாணசபை உறுப்பினர்களால் ஒதுக்கப்படும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை Criteria Base Grant (CBG)
4. குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை Provincial Specific Development Grant (PSDG)
5. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் Decentralized Capital Budget (DCB)
6. பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டம் Rainforcing Programme (1 Million)
7. முதலீட்டு வேலைத்திட்டம் Capital Programme (4 Million)
8. முகவர் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் நன்கொடை
9. வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு திட்டம் (Nelsip/Puraneguma)

10. அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிதிகள் (NGO's Fund)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வருமானம் ஏனைய பிரதேச சபைகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே உள்ளது. இருப்பினும் தனது வருமானத்தின் சிறு பகுதியை வருடாவருடம் அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்து செயற்படுத்தி வருகின்றது. வருமான அதிகரிப்புக்கு ஏற்ற வழிகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டு வருகின்றது. அந்த வகையில் எதிர்காலத்தில் "சோலைவரி" அறவீடு மேற்கொள்வதற்கு திர்மானிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அண்மைக்கால அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த நிதி மூலங்களையும், அவற்றால் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திப் பணிகளையும் நோக்குவோம்.

## ➢ 2010 – 2015 வரை பங்களிப்புச் செய்த நிதி மூலங்கள் பின்வருமாறு

1. CBG
2. PSDG
3. DCB
4. Operational Support Grant
5. CLG Fund
6. ENReP
7. NGO's Fund - Necord
8. Nelsip /Puraneguma
9. Maganeguma
10. Unicef
11. Rainforcing Programme (1 Million)
12. Capital Programme (4 Million)
13. Council Fund

2010 – 2015 வரை நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திப்பணிகள் பின்வருமாறு

வருடம் 2010

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | | புலோப்பளை நூலகக் கட்டடம் திருத்தம் | புலோப்பளை | 0.663 |
| 2 | CBG | நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் | புலோப்பளை | 0.500 |
| 3 | | தர்மக்கேணி சனசமூக நிலையம் திருத்தம் | தர்மக்கேணி | 0.009 |
| 4 | PSDG | மலசலகூடம் அமைத்தல் | பளை நகரம் | 0.506 |
| 5 | | கச்சார்வெளி பிரதான வீதி திருத்தம் | கச்சாாவெளி | 0.793 |
| 6 | SCF | சரஸ்வதி முன்பள்ளி திருத்தம் | வண்ணான்கேணிவடக்கு | 0.160 |
| 7 | Operational | பளை மரக்கறிச் சந்தை திருத்தம் | பளை நகரம் | 0.435 |
| 8 | Support | பளை மீன் சந்தை | பளை நகரம் | 0.332 |
| 9 | Grant | இயக்கச்சி மரக்கறிச் சந்தை புனரமைத்தல் | இயக்கச்சி | 0.473 |
| 10 | | இயக்கச்சி மீன் சந்தை புனரமைத்தல் | இயக்கச்சி | 0.223 |
| 11 | | பளை சந்தை வேலி, கேற் அமைத்தல் | பளை நகரம் | 0.180 |
| 12 | | அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | பளை நகரம் | 0.037 |
| 13 | CLG Fund | பழைய நூலகக் கட்டடம் திருத்தம் | பளை நகரம் | 0.298 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | | புலோப்பளை உப அலுவலகக் கட்டடம் புனரமைத்தல் | பளை நகரம் | 0.371 |
| 15 | | பளை சந்தை மாட்டிறைச்சிக்கடை திருத்தம் | பளை நகரம் | 0.049 |
| 16 | Council Fund | இயக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை திருத்தம் | இயக்கச்சி | 0.065 |
| 17 | | பளை சந்தை கிணறு, மலசலகூடம் திருத்தம் | பளை நகரம் | 0.091 |
| 18 | | பொதுச் சந்தையில் மாட்டிறைச்சிக் கடை திருத்தம் | பளை நகரம் | 0.064 |
| 19 | | அலுவலக முன்பக்க வேலி, கேற் திருத்தம் | பளை நகரம் | 0.026 |

வருடம் 2011

| *இல* | *நிதி மூலம்* | *வேலையின் பெயர்* | *இடம்* | *செலவினத் தொகை (மில்லியன்)* |
|---|---|---|---|---|
| 1 | CBG | இயக்கச்சி உப அலுவலகத் திருத்தம் | இயக்கச்சி | 0.040 |
| 2 | PSDG | திண்மக்கழிவு கொட்டும் இடம் திருத்தம் (220m$^2$) | அல்லிப்பளை | 0.800 |
| 3 | | பளை பாடசாலை வீதி அமைத்தல் (100 மீற்) | பளைநகரம் | 0.438 |
| 4 | ENRep | புதுக்காட்டுச் சந்தி மரக்கறிச் சந்தை புனரமைத்தல் | சோரன்பற்று | 0.882 |
| 5 | | பளைநகர பஸ்தரிப்பிடம் திருத்தம் (கட்டம்-1) | பளைநகரம் | 4.254 |
| 6 | NGO's Fund - Necord | அலுவலகக் கட்டடம் புனரமைத்தல் | பளைநகரம் | 3.500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | Maganeguma | கொற்றண்டார்குளம் கோவில்வயல் வீதிதிருத்தம்(1.25கி.மீ) | கோவில்வயல் | 17.60 |
| 8 | | முகாவில் கிருஸ்ணன் கோவில் வீதி திருத்தம் (0.75கி.மீ) | முகாவில் | 44.00 |
| 9 | | பூதவராயர் கோவில் வீதி திருத்தம் (1.00கி.மீ) | தர்மக்கேணி | 19.00 |
| 10 | | முல்லையடி வீதி திருத்தம் (1.00கி.மீ) | முல்லையடி | 19.00 |
| 11 | Council Fund | கொல்களம் அமைத்தல் | பளைநகரம் | 0.505 |
| 12 | | முள்ளிப்பற்று உப அலுவலக மேலதிக வேலை | இயக்கச்சி | 0.316 |
| 13 | | முள்ளிப்பற்று உப அலுவலக எல்லை வேலி, கேற் அமைத்தல் | இயக்கச்சி | 0.088 |
| 14 | | கொல்களத்தின் எல்லைச்சுவர் அமைத்தல் | பளைநகரம் | 0.350 |

வருடம் 2012

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | Maganeguma | முகாவில் இயக்கச்சி வீதி திருத்தம் (1.00கி.மீ) | முகாவில் | 43.00 |
| 2 | | நீலாம்பிகை வீதி திருத்தம் (1.00கி.மீ) | தர்மக்கேணி | 25.50 |
| 3 | | சங்கத்தார்வயல் வீதி திருத்தம் (1.00கி.மீ) | சங்கத்தார்வயல் | 20.90 |
| 4 | | பேராலை வீதி திருத்தம் (1.00கி.மீ) | பேராலை | 38.50 |
| 5 | | கச்சார்வெளி வீதி திருத்தம் (1.00கி.மீ) | கச்சார்வெளி | 32.40 |
| 6 | Nelsip / | மாசார் பாடசாலை வீதி திருத்தம் (1.20கி.மீ) | மாசார் | 4.65 |
| 7 | Puraneguma | புலோப்பளை கிழக்கு முல்லையடி வீதி திருத்தம் (1.20கி.மீ) | புலோப்பளை | 3.91 |
| 8 | | புலோப்பளை அல்லிப்பளை வீதி திருத்தம்(1.30கிமீ) | புலோப்பளை | 4.32 |
| 09 | | முகாவில் பிரதான வீதி திருத்தம் (1.30கிமீ) | முகாவில் | 4.63 |

வருடம் 2013

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | PSDG | தம்பகாமம் மாமுனை வீதி திருத்தம் | தம்பகாமம் | 4.862 |
| 2 | | சந்தைக் கடைத்தொகுதி அமைத்தல் | பளைநகரம் | 3.718 |
| 3 | Council Fund | செயலாளர் அறை அலுமினியப் பிரிப்பு செய்தல் (கட்டம் 01) | பளைநகரம் | 0.149 |
| 4 | | எல்லை வேலி அமைத்தல் | பளைநகரம் | 0.145 |
| 5 | | தலைமை அலுவலக மலசலகூடம் அமைத்தல் | பளைநகரம் | 0.013 |
| 6 | | பளை பஸ் நிலைய கூரை வேலை திருத்தம் | பளைநகரம் | 0.047 |
| 7 | | தாபனப்பகுதி மற்றும் கணக்குப்பகுதி அறைகள் அலுமினியப் பிரிப்பு செய்தல் (கட்டம் 02) | பளைநகரம் | 0.268 |
| 8 | | PRO, திட்டமிடல் மற்றும் பொது அறைகள் அலுமினியப் பிரிப்பு செய்தல் (கட்டம் 03) | பளைநகரம் | 0.216 |
| 9 | | காளி கோவில் வீதியில் மதகு அமைத்தல் | பளைநகரம் | 0.100 |
| 10 | | ஐயனார் கோயில் வீதி திருத்தம் | பளைநகரம் | 0.100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Unicef | மலசலகூடம் அமைத்தல் (5) | விநாயகபுரம் | 0.396 |
| 12 | | மலசலகூடம் அமைத்தல் (5) | அறத்திநகர் | 0.396 |
| 13 | | மலசலகூடம் அமைத்தல் (4) | பேராலை | 0.317 |
| 14 | | மலசலகூடம் அமைத்தல் (1) | தம்பகாமம் | 0.079 |
| 15 | | பொதுக்கிணறு திருத்தம் | கிளாலி | 0.058 |
| 16 | | பொதுக்கிணறு திருத்தம் | புலோப்பளை கிழக்கு | 0.049 |
| 17 | | பொதுக்கிணறு திருத்தம் | செல்வபுரம் | 0.064 |
| 18 | | பொதுக்கிணறு திருத்தம் | தம்பகாமம் | 0.036 |
| 19 | | பொதுக்கிணறு திருத்தம் (முகமாலை) | பொந்தர் குடியிருப்பு | 0.063 |
| 20 | | பொதுக்கிணறு திருத்தம் (முகமாலை) | ஈருருவி | 0.030 |
| 21 | | இயக்கச்சியில் பொதுக்கிணறு அமைத்தல் | இயக்கச்சி | 0.500 |
| 22 | | பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கியும் நிறுத்தியும் கொள்வனவு செய்தல் (5) | பளைநகரம் | 0.200 |
| 23 | | தண்ணீர் பௌசரின் ரயர்கள் மற்றும் நீர் விநியோக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | பளைநகரம் | 0.170 |
| 24 | Nelsip / Puraneguma | புலோப்பளை செல்வபுரம் வீதி திருத்தம் (1.80) | செல்வபுரம் | 20.09 |
| 25 | | இயக்கச்சி விநாயகபுரம் வீதி திருத்தம் (2.50) | இயக்கச்சி | 14.18 |
| 26 | | பளை பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் | பளைநகரம் | 8.49 |

வருடம் 2014

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | CBG | செருக்கன்சாட்டி அம்மன் கோவில் வீதி திருத்தம் | தம்பகாமம் | 0.500 |
| 2 | | பொதுக் கிணறு அமைத்தல் - கிளாலி | கிளாலி | 0.200 |
| 3 | | தளபாடக் கொள்வனவு பொது நூலகம் | புலோப்பளை | 0.100 |
| 4 | | புத்தக, தளபாடக் கொள்வனவு பொது நூலகம் | புலோப்பளை | 0.100 |
| 5 | | புத்தக, தளபாடக் கொள்வனவு பொது நூலகம் | முள்ளிப்பற்று | 0.075 |
| 6 | PSDG | முகமாலை ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் | இத்தாவில் | 2.000 |
| 7 | | பேருந்து தரிப்பிட மேல்மாடி அமைத்தல் | பளைநகரம் | 3.718 |
| 8 | Council Fund | உப அலுவலக மலசல கூடம் திருத்தம் | இயக்கச்சி | 0.122 |
| 9 | | நெளியாய் அம்மன்கோவில் மதகு அமைத்தல் | தம்பகாமம் | 0.075 |
| 10 | | தலைமை அலுவலகத்திற்கான நீர் விநியோகம் | பளைநகரம் | 0.090 |
| 11 | | பேராலை 2ம் குறுக்கு வீதி அமைத்தல் | பேராலை | 0.073 |
| 12 | | தலைமை அலு. வாகனத்தரிப்பிடம் அமை(கட்டம்-1) | பளைநகரம் | 0.246 |
| 13 | Nelsip /Pura. | பளைநகரக் கடைத்தொகுதி அமைத்தல்(கட்டம் -01) | பளைநகரம் | 15.03 |

வருடம் 2015

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | PSDG | மலையான்காடு மயானம் திருத்தம் | தம்பகாமம் | 1,468,611.51 |
| 2 | | வாராந்தச் சந்தை அமைத்தல் - மாசார் | மாசார் | 873,591.40 |
| 3 | Rainforcing Programme (1 Million) | அறத்திநகர் அல்லிப்பளையில் கழிவு சேகரிக்கும் இடம் திருத்தம் | அல்லிப்பளை | 199,560.00 |
| 4 | | மலசலகூடம் திருத்தம் (புலோப்பளை பொதுச் சந்தை, அலுவலகம்) | பளை நகரம் | 98,939.50 |
| 5 | | புலோப்பளை சந்தை நீர் விநியோகம் | பளை நகரம் | 95,064.00 |
| 6 | | பண்டமாவடி தர்மக்கேணி வீதி திருத்தம் (1200’) | தர்மக்கேணி | 399,920.00 |
| 7 | | தலைமை அலுவலக படிக்கட்டுப் பகுதி அடைத்தல் | தலைமை அலுவலகம் | 33,304.50 |
| 8 | | புலோப்பளை மீன்சந்தைக் கட்டடம் திருத்தம் | பளை நகரம் | 451,530.00 |
| 9 | | பளை பாடசாலைவீதி திருத்தம் | பளை நகரம் | 455,189.00 |
| 10 | | தலைமை அலுவலகத்தில் பூச்செடி நடுதல் | பளை நகரம் | 25,000.00 |
| 11 | | பளை நகரப் பேரூந்து தரிப்பிட முற்றம் திருத்தம். | பளை நகரம் | 499,955.00 |
| 12 | | வீதி விளக்குகள் பொருத்துதல் | பச்சிலைப்பள்ளி | 50,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | | மாசார் சந்தை மலசலகூடம், வேலி அமைத்தல் | மாசார் | 449,136.95 |
| 14 | | பளை பேரூந்துத் தரிப்பிடம் திருத்தம். (கட்டம் 11) | பளை நகரம் | 449,876.00 |
| 15 | | புலோப்பளை மரக்கறிச்சந்தைக் கட்டடம் திருத்தம் | பளை நகரம் | 466,446.10 |
| 16 | | கரடிப்பள்ள மயானம் துப்புரவு செய்தல் | பளை நகரம் | 195,600.00 |
| 17 | | முகமாலை உப அலுவலகத்தில் கிணறு திருத்தம் | முகமாலை | 153,202.05 |
| 18 | | தட்டாதெரு வீதி திருத்தம் | பெரியபளை | 199,961.00 |
| 19 | | புலோப்பளை சந்தை வாகனத் தரிப்பிடத் திருத்தம். | பளை நகரம் | 113,035.10 |
| 20 | | உப அலுவலகங்களுக்கான உள்ளக இத்தாவில், அணுகு பாதை திருத்தம் **(Access Road)** | இயக்கச்சி, பளை நகரம் | 362,908.40 |
| 21 | Council Fund | வாகன தரிப்பிடம் அமைத்தல் பகுதி-01 | தலைமை அலுவல. | 399,376.00 |
| 22 | | உப அலுவலக வேலி மற்றும் மதில் அமைத்தல் | முகமாலை | 298,170.90 |
| 23 | | பண்டமாவடி தர்மக்கேணி வீதி திருத்தம் (2700’) | தர்மக்கேணி | 898,320.00 |
| 24 | | நரசிங்க வைரவர் வீதி திருத்தம் (152’) | பளை நகரம் | 582,993.20 |
| 25 | | சவேரியார்புர வீதி திருத்தம் (1860’) | கிளாலி | 597,640.00 |
| 26 | | இத்தாவில் பிரதான வீதி திருத்தம்(முருகன்கோவில்) | இத்தாவில் | 1,000,000.00 |
| 27 | Nelsip /Pura | பளைநகரக் கடைத்தொகுதி அமைத்தல்(கட்டம் -02) | பளைநகரம் | 7,681,411.00 |

வருடம் 2016

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | CBG | பெரியபளை புலோப்பளை இணைப்பு வீதி (412மீ) | பளைநகரம் | 0.40 |
| 2 | | சந்தை அருகாமையை சுத்தப்படுத்தல் - மாசார் | மாசார் | 0.10 |
| 3 | PSDG | சூரிய மின்கலம் பொருத்துதல் (5) | 1.இயக்கச்சி சந்தி பஸ்தரிப்பிடம்<br>2.கண்டி வீதி இயக்கச்சி<br>3.கரந்தாய் பஸ்தரிப்பிடம்<br>4.மாசார் சந்தை<br>5.முல்லையடி பாலம் | |
| 4 | DCB | வீதி விளக்கு பொருத்துதல் - மாசார் சந்தி | மாசார் | 0.05 |
| 5 | | வீதி விளக்கு பொருத்துதல் - கோவில்வயல் | கோவில்வயல் | 0.05 |
| 6 | | உதயதாரகை ச.ச. நிலையம் தளபாடம் செய்தல் | இத்தாவில் | 0.05 |
| 7 | | சரஸ்வதி சனசமூக நிலையம் தளபாடம் செய்தல் | இத்தாவில் | 0.05 |
| 8 | Rainforcing Programme (1 Million) | முகமாலை அலுவலக வாகன் தரிப்பிடம் அமைத்தல் | இத்தாவில் | 0.20 |
| 9 | | இயக்கச்சி சந்தையில் பொது மலசலகூடம், நீர் விநியோகம் அமைத்தல் | இயக்கச்சி | 0.60 |
| 10 | | பெரியகுளம் வீதி திருத்தம் (250மீ) | பளைநகரம் | 1.00 |

வருடம் 2016

| இல | நிதி மூலம் | வேலையின் பெயர் | இடம் | செலவினத் தொகை (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | CBG | பெரியபளை புலோப்பளை இணைப்பு வீதி (412மீ) | பளைநகரம் | 0.40 |
| 2 | | சந்தை அருகாமையை சுத்தப்படுத்தல் - மாசார் | மாசார் | 0.10 |
| 3 | PSDG | சூரிய மின்கலம் பொருத்துதல் (5) | 1.இயக்கச்சி சந்தி பஸ்தரிப்பிடம்<br>2.கண்டி வீதி இயக்கச்சி<br>3.கரந்தாய் பஸ்தரிப்பிடம்<br>4.மாசார் சந்தை<br>5.முல்லையடி பாலம் | |
| 4 | DCB | வீதி விளக்கு பொருத்துதல் - மாசார் சந்தி | மாசார் | 0.05 |
| 5 | | வீதி விளக்கு பொருத்துதல் - கோவில்வயல் | கோவில்வயல் | 0.05 |
| 6 | | உதயதாரகை ச.ச. நிலையம் தளபாடம் செய்தல் | இத்தாவில் | 0.05 |
| 7 | | சரஸ்வதி சனசமூக நிலையம் தளபாடம் செய்தல் | இத்தாவில் | 0.05 |
| 8 | Rainforcing Programme (1 Million) | முகமாலை அலுவலக வாகன் தரிப்பிடம் அமைத்தல் | இத்தாவில் | 0.20 |
| 9 | | இயக்கச்சி சந்தையில் பொது மலசலகூடம், நீர் விநியோகம் அமைத்தல் | இயக்கச்சி | 0.60 |
| 10 | | பெரியகுளம் வீதி திருத்தம் (250மீ) | பளைநகரம் | 1.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Capital Programme (4 Million) | பெரியபளை புலோப்பளை வீதி (கொங்கிறீற்) அமைத்தல் (261மீ) | பளைநகரம் | 4.00 |
| 12 | | கரந்தாய் குடியிருப்பு வீதி – 01 திருத்தம் (372மீ) | சோரன்பற்று | 2.00 |
| 13 | Council Fund | முள்ளிப்பற்று உப அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | இயக்கச்சி | 0.20 |
| 14 | | சங்கங்கடையடி வீதி திருத்தம் (316மீ) | கோவில்வயல் | 2.00 |
| 15 | | மொண்டுவான் வைரவர் வீதி திருத்தம் (375மீ) | முகமாலை | 2.00 |
| 16 | Nelsip /Pura. | இயக்கச்சி சந்தை அமைத்தல் | இயக்கச்சி | 8.43 |
| | | தலைமை அலுவலக கட்டடம் அமைத்தல் | பளைநகரம் | 15.00 |
| 17 | | இத்தாவில் முருகன்கோவில் வீதி திருத்தம் (324மீ) | இத்தாவில் | 2.00 |
| 18 | | இத்தாவில் முருகன்கோவில் வீதி திருத்தம் (தொடர்வேலை)150மீ | இத்தாவில் | 0.90 |


பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

பல்சுவை நிறைந்த தரமான உணவு வகைகளும்
குளிர்பான வகைகளும்,
வைபவங்களுக்குத் தேவையான
உணவுகளும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# அபர்ணா உணவகம்

# APARNA UNAVAGAM





கண்டி வீதி,
பளை.

A9 Road,
Palai

அனைத்து வகையான காலை, பகல்,
மாலை நேர உணவுவகைகளையும்
தேனீர், வடை, றோல்ஸ், கேக், இடியப்பம்,
பிட்டு, தோசை, ஐஸ்கிறீம் வகைகளையும்
தரமாகவும் சுவையாகவும்
மலிவாகவும் ஓரே இடத்தில் பெற்றிட
உங்கள் நம்பிக்கையான தெரிவு

# குழந்தை உணவகம்



# Kulanthai Unavakam



பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Mohans Book Shop

புதினப் பத்திரிகைகள், பாடசாலை உபகரணங்கள்
போட்டோக்கொப்பி மற்றும் அலுவலக உபகரணங்கள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## மோகன்ஸ் புத்தகசாலை





A9, பளை நகரம், பளை

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# பிள்ளையார் உணவகம்



காலை, பகல், மாலை நேர
உணவு வகைகளையும், தரமான
சிற்றுண்டி வகைகளையும்
சுவைத்திட நாடுங்கள்



பிள்ளையார் உணவகம்

பளை நகரம், பளை

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# பிள்ளையார் பான்சி



அலங்காரப் பொருட்கள்,

பரிசுப் பொருட்கள்,

பாடசாலை உபகரணங்கள்,



வீட்டிற்குத் தேவையான அலுமினியப் பாத்திரங்கள்
அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கு இன்றே நாடுங்கள்.

பிள்ளையார் பான்சி

பளை நகரம், பளை



# R.G. TRADERS

A9. Road, Palai.

Tel:- 021 228 3185

# Nagamman Multi Shop

அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்



மற்றும் கூல் சோடா, யூஸ்,
ஐஸ்கிறீம், பிஸ்கட் வகைகள்
மற்றும் அன்றாட
வீட்டுப் பாவனைப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள

## நாகம்மன்

பல்பொருள் வாணிபம்

கண்டி வீதி, பளை

Tel:- 077 423 5616


பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்
SIVASAKTHY
HARDWARE
சீமெந்து வகைகள்,
இரும்புக்கம்பி வகைகள்,
பைப் வகைகள்,
பெயின்ற் வகைகள்,
கட்டிடப்பொருட்கள் மற்றும்
தரமான கூரைத்தகடுகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
சிவசக்தி
ஹாட்வெயர்
பளை நகரம், பளை


பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்
வியாபார நிறுவனங்கள்,
அலுவலகங்கள் மற்றும் உங்கள்
இல்லங்களுக்குத் தேவையான அலுமினிய பிற்றிங்
நேர்த்தியாகச் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
பிள்ளையார் அலுமினிய பிற்றிங்
பளை நகரம், பளை

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்





# சிவா பல்பொருள் வாணிபம்

கண்டி வீதி,
பளை நகரம்,
பளை

அன்றாட வீட்டுப் பாவனைப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

உரிமையாளர் :-
தா. சிவானந்தன்

T.P.- 077 974 8826



பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்



பலசரக்குப் பொருட்கள்,
பிஸ்கட் வகைகள் அனைத்தையும்
பெற்றிட நாடுங்கள்




# விது பல்பொருள் வாணிபம்


**T.P.- 077 069 1768**

பளை நகரம், பளை

---

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்





# விது அரைக்கும் ஆலை

**T.P.- 077 952 6066**

பளை நகரம், பளை

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# Yarl Style City

இரு பாலாருக்குமான
அனைத்துவிதமான ஆடைத்
தெரிவுகளுக்கும் பளை நகரத்தில்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



## யாழ் ஸ்ரைல் சிற்றி

**ஜெ. அஸ்வின்**

**T.P.- 077 588 9848**

பளை நகரம், பளை

பச்சிலை மலர் சிறக்க வாழ்த்துகிறோம்




## தீந்தமிழ் மின் ஒட்டுத் தொழிலகம்





பளை நகரம், பளை






Ramyan Printers, Madduvil. 0773471022